பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 14 வியாழக்கிழமை (29.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 32

# யாழ். மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் செயற்படக்கூடிய சூழ்நிலை இல்லை!

## பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் அரசுக்கு அவசர அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

**யாழ். மாவட்டத்தில் அரச ஊழியர்களும் வங்கி அலுவலர்களும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் பணிப்புறக்கணிப்பினால் உருவாகி இருக்கும் நெருக்கடி குறித்து அரச அதிபர் கே.கணேஸ் அரச உயர்மட்டத்துக்கு அறிவித்திருக்கின்றார்.**

**சிவில் நிர்வாகத்தை இயக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதால் பொருத்தமான நடவடிக்கை எதனையாவது எடுக்க வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சிடம் அவசர கடிதம் மூலம் கோரியிருக்கிறார் அரசஅதிபர்.**

யாழ். மாவட்ட நிலவரம் தொடர்பான அரச அதிபரின் இந்த அவசர கடிதம் திங்களன்று பொதுநிர்வாக அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதேவேளை, களநிலைமை தொடர்பான பூரண விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினை அடுத்த சில தினங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அண்மைய நாள்களாக இடம்பெற்ற தாக்குதல்கள், அசம்பாவித சம்பவங்களின் போது சிவிலியன்களுக்கு ஏற்பட்டிருக்கும் உயிரிழப்புகள், பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் அடங்கியதாக இந்த அறிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று மன்னார் ஸ்தம்பிதம்

மன்னார், டிசெ.29

மன்னாரில் நேற்று துக்கதினத்துடன் கூடிய ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்வும், நகரின் வழமை நிலையும் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் 'மாமனிதர்' ஜோசப் பரராஜசிங்கம் கொல்லப்பட்டமை, பேசாலையில் சிறுவன் ஒருவர் உட்பட ஐந்துபேர் படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டமை, புங்குடுதீவில் தமிழ் யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை, தமிழ் மக்கள் மீது படையினர் நடத்தும் தாக்குதல்கள் ஆகியவற்றிற்கு எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்தே இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது.

முழுமையான கடையடைப்பு மேற்கொள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் ஈழ அகதி முகாம்கள் குடையப்பட்டன

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் அகதி முகாம்கள் அனைத்தையும் தமிழகப் பொலீஸார் நேற்று குடைந்தெடுத்துத் தீவிர தேடுதல்களை நடத்தியிருக்கின்றனர்.

புதுடில்லியிலிருந்து ஜனாதிபதி மஹிந்த நாளை தமிழகத்திற்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதால் பாதுகாப்புக் காரணங்களுக்காக இவ்வாறான தேடுதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை, இன்று தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

## மோட்டார் சைக்கிளில் சென்றபோது
## முத்திரைச் சந்தியில் 2 இளைஞர்கள் படையினரால் நேற்று சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், டிசெ.29

முத்திரைச் சந்திப் பகுதியில் இரு இளைஞர்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினர்.

கொழும்புத்துறையைச் சேர்ந்தவரான யோகராஜா கஜேந்திரன் (வயது 21), அரியாலை கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்தவரான பரஞ்சோதி தீபன் (வயது 27) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்கள் உழவு இயந்திர சாரதிகளாகப் பணியாற்றி வந்தனர்.

படங்கள் 2ஆம் பக்கத்தில்

பருத்தித்துறை வீதியில் என்.பி.ஜே.ஏ. 5733 இலக்க சிவப்பு நிறப் 'பல்ஸர்' ரக மோட்டார் சைக்கிளில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் பயணித்தபோதே அசம்பாவிதம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசப்பின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, டிசெ.29

கிறிஸ்மஸ் தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை மட்டக்களப்பு கத்தோலிக்க சேமக் காலையில் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு லெயாட்ஸ் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து பூதவுடல் ஊர்வலமாக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. அதற்கு முன்னதாக அன்னாரின் பூதவு டல் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இறுதிக் கிரியைகள் நடைபெறும் இன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

இதற்கிடையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மட்டக்களப்பு வைத்தியசாலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துன்புறுத்தல்

இராமேஸ்வரம், டிசெ.29

கச்சதீவு கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அச்சுறுத்தி அவர்களிடமிருந்து பெருந்தொகையான மீன்களை பறித்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடித்துறை அனுமதியுடன் 638 படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். நள்ளிரவில் கச்சதீவு கடற்பகுதியில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அங்கு சென்ற இலங்கைக் கடற்படையினர் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த இறால், மீன்களைப் பறித்தெடுத்தனர் எனக் கூறப்படுகிறது.

அத்துடன், படகில் இருந்த போட்பலகை மற்றும் வலைகளை வெட்டிய இலங்கை கடற்படையினர் இலங்கைக் கடற்பகுதிக்குள் இனிமேல் மீன்பிடிக்க வரக்கூடாதென எச்சரித்ததுடன் வானத்தை நோக்கி துப்பாக்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த - ஜெயலலிதா சந்திப்பு ரத்து

புதுடில்லி, டிசெ.29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சந்திப்பு ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

நான்குநாள் பயணமாக இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சென்னையில் ஜெயலலிதாவைச் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான உத்தேச நிகழ்ச்சி நிரலும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்தது.

ஆனால், நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் நவ்தேஜ் சர்னா, இலங்கை ஜனாதிபதியின் சென்னைப் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் அதிக பங்களிப்பை நேரடியாகக் கோரினார் மஹிந்த

புதுடில்லி, டிசெ.29

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அமைதி முயற்சிகளில் ஆரம்பம் முதல் முக்கிய பங்கை வகித்து வரும் இந்தியா, எதிர்கால அமைதி முயற்சிகளின்போது கூடுதலான பொறுப்புகளுடன் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

அதேபோல், இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளில் ஓர் உறுப்பினராகவும் புதுடில்லி வரவேண்டும்.

- இவ்வாறு நேற்று இந்தியாவில் வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்ற ஜனாதிபதி நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தபோதே இதனை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

முன்னதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்பதற்கான உத்தியோகபூர்வ

(12ஆம் பக்கம் பார்க்க)



இந்திய பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் மஹிந்த ராஜபக்ஷவும் பாரியாரும்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசுமீது சர்வதேசத் தடை அவசியம்

## அமெரிக்கத் தமிழ் அமைப்புகள் கூட்டறிக்கை

கொழும்பு,டிசெ.29

படுகொலைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இலங்கை அரசின் மீது சர்வதேச தடை அவசியம் இவ்வாறு அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் தமிழ் அமைப்புகள் விடுத்துள்ள அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

உலகத்தமிழ் ஒருங்கிணைப்புக் குழு இலங்கைத் தமிழ்ச் சங்கம், உலகத் தமிழர் பெண்கள் அமைப்பு, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, பெண்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு மையம், சர்வதேச கலாசார மையம், உலகத்தமிழர் அமைப்பு, ஒகியோ தமிழ்ச் சங்கம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், கலிபோர்னியா இலங்கைத் தமிழ்ச் சங்கம், வன்கூவர் - போர்ட்லாண்ட் - வாசிங்ரன் இலங்கை தமிழ்ச் சங்கம், வட கரோலினா இலங்கைத் தமிழ்க் கூட்டமைப்பு, கொலம்பியா மாவட்ட தமிழர் நல்வாழ்வு மற்றும் மனித உரிமைகள் குழு ஆகியன இந்தக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவக் கட்டுப்பாட்டில் அதில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மட்டக்களப்பு நகரின் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையின்போது நள்ளிரவில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டது எமக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேவாலயத்தின் புனிதத் தன்மையைச் சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் படுகொலையானது, தேவாலயங்களை சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகள் எரித்ததன் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தக் கோழைத்தனமான நடவடிக்கை யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துக்கு 2.1க்கு எதிரானது மட்டுமல்ல யுத்தத்தின் போது பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பாக கூட்டப்பட்ட 4ஆவது ஜெனிவா மாநாட்டின் சரத்துக்களையும் மீறியுள்ளது. இது ஒரு அப்பட்டமான அரச பயங்கரவாதம் என்பது தெளிவானது.

சர்வதேச சமூகமானது இலங்கை அரசின் இத்தகைய திட்டமிட்ட படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், அரசு மீது சர்வதேச தடைவிதிக்கவேண்டும். இதுவே அமைதி முயற்சிகளின் மீது தமிழ் மக் களுக்கு நம்பிக்கையூட்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இலங்கைக்கு இந்தியாவின் 'ராடர்' கருவிகள்

இலங்கைக்கு இரண்டு 'ராடர்' கருவித் தொகுதிகளை வழங்குவதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான பாரத் இலத்திரனியல் நிறுவனத்திடம் (பெல்) இத்தகைய ராடர் கருவிகளை உருவாக்க இந்தியப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும் -

'இந்திரா-02' எனப்படும் இந்த ராடர் கருவிகள் இந்திய விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டு அதன்மூலம் இலங்கை அரசுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது என்றும் - தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிற்கு மூன்று நாள் விஜயமாக வந்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்த ராடர் கருவிகள் கையளிக்கப்படலாம் என்றும் கூட சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த 'ராடர்' கருவிகளால் மிகச் சிறிய ரக விமானங்கள் பறப்பதைக் கண்டுபிடிக்க முடியுமா என்பது குறித்து சந்தேகம் கிளப்பப்படுகின்றது.

இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் அரசு இராணுவ தளபாடங்களை வழங்க முயற்சிக்கும் சந்தர்ப்பத்தைத் தடுக்கவே இந்திய அரசு இந்தமுடிவை எடுத்துள்ளது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-க)

## மதகுருவைத் தடுத்து படையினர் விசாரணை

யாழ்ப்பாணம்,டிசெ.29

கத்தோலிக்க மதகுரு ஒருவர் படையினரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

நத்தார் நிகழ்வுகளை முடித்துக்கொண்டு கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற குறிப்பிட்ட மதகுரு நுணாவில் கிழக்குப் பகுதியில் படையினரால் தடுக்கப்பட்டு விசாரணை செய்த பின்னர் விடுவிக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. (ஒ)

## இராணுவ டிரக் மீது. கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

புன்னாலைக்கட்டுவன், பலாலிவீதியில் படையினரின் 'டிரக்' வாகனம் மீது நேற்று கிரனேட் வீசப்பட்டது. நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

## தேவாலயத்தில் சீருடைகள் மீட்பு

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு புனித அந்தோனியார் தேவாலயத்தின் ஓய்வறையில் இரு தொகுதி இராணுவச் சீருடைகள், காலணிகள் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் மீட்கப்பட்டன. தேவாலயத்தில் காலை வழிபாட்டில் கலந்துகொண்ட பொதுமக்கள் இந்தச் சீருடைகளைக் கண்டுள்ளனர். இதையடுத்து மட்டக்களப்பு பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்ட தேவாலயத்திற்கு அருகாமையில் புனித அந்தோனியார் தேவாலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஹலோரஸ்ட் நிறுவன வாகனங்கள் மயிலங்கூடல் பகுதியில் நேற்று மீட்பு

வலி.வடக்கு,29

ஹலோரஸ்ட் நிறுவனத்திலிருந்து நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட அந்த நிறுவனத்தின் இரு வாகனங்களும் இளவாலைப் பகுதியில் நேற்றுக் கைவிடப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோரஸ்ட் நிறுவனத்தின் அலுவலகம் நல்லூரில் உள்ளது. நேற்றுமுன்தினம் மாலை இந்த அலுவலகத்துக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் காவலாளிகளைக் கட்டிவைத்துவிட்டு இரு வாகனங்கள் மற்றும் நவீன கருவிகளை எடுத்துச் சென்றனர். எடுத்துச்செல்லப்பட்ட அந்த இரு வாகனங்களும் இளவாலை, மயிலங்கூடல் வேளாங்கன்னிமாதா கோவிலடியில் கைவிடப்பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட்டன. நேற்று இரவு அவை பொலீஸாரால் எடுத்துச் செல்லப்பட்டன. அப்பகுதியில் படையினர் குவிக் கப்பட்டிருந்தனர். இதற்கிடையில் ஹலோ ரஸ்ட் நிறுவனத்திலிருந்து வாகனங்களும், நவீன கருவிகளும் கடத்தப் பட்ட சம்பவம் தொடர்பாக அந்நிறுவனத்தில் பணியாற்றும் இருவரை நேற்றுமுன்தினம் யாழ். தட்டா தெருப் பகுதியில் வைத்து படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என்று யாழ். பொலீஸ்நிலையப் பொலீஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து வாக்கு மூலம் பெறப்பட்டதாகவும், அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் பொலீஸார் மேலும் கூறினார். (ஒ-7-8-86)

## மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்டக் கழகங்களுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் முற்பகல் 9 மணிமுதல் பளை மத்திய பொது விளையாட்டு மைதானத்தில் பெறவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் நடைபெறும் இச் சுற்றுப்போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம் லீக் ஆகியவற்றிலிருந்து தலா இரு அணிகளும் வடமராட்சி கிழக்கிலிருந்து 3 அணிகளுமாக மொத்தம் 9 அணிகள் பங்குபற்றுகின்றன. (ஒ-6)

## புதுவருடதின நள்ளிரவுத் திருப்பலி மரியன்னை பேராலயத்தில் ரத்து

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். மரியன்னை பேராலயத்தின் புதுவருட நள்ளிரவுத் திருப்பலி நிகழ்வு நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெறமாட்டாது என பேராலய உதவிப் பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

இதேவேளை, பேராலயத்தில் புதுவருடத்தன்று முதலாம் திருப்பலி காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ளது. இரண்டாம் திருப்பலி காலை 8 மணிக்கு இடம்பெறும். மாலைத் திருப்பலி நடைபெறமாட்டாது. அன்றையதினம் காலை 7 மணிக்கு புனித ஆரோக்கியநாதன் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஒ-6)

## கோண்டாவில் வாசி ஒருவரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.29

நுவரெலியாவிற்குச் சென்ற கோண்டாவில் வாசி ஒருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்தமாதம் தொழில் நிமித்தம் நுவரெலியாவிற்குச் சென்ற கோண்டாவிலைச் சேர்ந்த இராசையா இராயானந்தன் (வயது 44) என்பவரே காணாமல்போயுள்ளார் என்று உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஊர்காவற்றுறை, செபஸ்தியார் கோவிலடியைச் சேர்ந்த பாபுஜி தாத்தா என்றழைக்கப்படும் பொன்னம்பலம் இராஜசிங்கம் (வயது 85) என்ற வயோதிபரை கடந்த ஒரு வாரகாலமாகக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை என்று கூறப்பட்டது. (ஒ-6-7-16)

## படையினரின் கெடுபிடி அதிகரிப்பு, வடமராட்சியில் இயல்புநிலை பாதிப்பு

கரவெட்டி,டிசெ.29

படையினரின் கெடுபிடிகளால் வடமராட்சியில் நேற்று இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத்தாக்குதலையடுத்து வடமராட்சியின் நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். சோதனைக் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

நேற்றுக்காலை நெல்லியடிச் சந்தியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலைய பணியாளர் ஒருவரைத் தாக்கினர் என்று கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து நெல்லியடிப் பகுதியில் நேற்று பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. அச்சம் காரணமாக வர்த்தக நிலையங்களில் பெரும்பாலானாவை மூடப்பட்டன. பொதுப்போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரப்பகுதியில் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை என்பன இயங்கி ஆரம்பித்தபோதும் சிலமணிநேரத்திலேயே அவை கலைந்தன. இ.போ.சபையின் பஸ் சேவையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றது.

அதிகாலை 5.15 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய பஸ் சேவை 6.30 மணிக்குப் பின்னரே ஆரம்பமாகியது. பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர். (ஒ-6-70-173)

## வவுனியாவளாக தெற்கு மாணவர் இடமாற்றம் கோருகின்றனராம்

வவுனியா,டிசெ.29

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் கல்விகற்றுவரும் தென்பகுதி மாணவர்கள் தாம் தொடர்ந்து வவுனியா வளாகத்தில் கல்விகற்கமுடியாத நிலையில் உள்ளனர் என்று வவுனியா வளாக முதல்வரிடம் முறையிட்டுள்ளனர்.

தற்போது வவுனியாவில் காணப்படும் பதற்றமான சூழ்நிலையில் தமது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வளாகத்தில் சுமார் 100 சிங்கள மாணவர்கள் கல்விகற்று வருகிறார்கள் இவர்கள் தமது பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தென்பகுதியில் உள்ள பல்கலைகழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வந்த தென்பகுதி மாணவர்கள் ஏற்கனவே தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுத்தரும்படி கோரியுள்ளமை தெரிந்ததே. (ஒ-164)

## வைமன் வீதிப்பகுதியில் நேற்று சுற்றிவளைப்பு

குருநகர்,டிசெ.29

நல்லூர், வைமன் வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்று காலை படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். வீடு வீடாகச் சென்ற படையினர் அடையாள அட்டைகளைப் பரிசோதித்ததுடன் வீடுகளில் சோதனையையும் நடத்தினர் என்று அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர். (ஒ-51)



யாழ். முத்திரைச் சந்திப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களையும், இந்த மரணங்கள் குறித்து மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன், யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து விசாரணை நடத்துவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: பரதன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சொல்ஹெய்மை ஓரங்கட்டும் இலங்கையின் முயற்சி தோல்வி

இனப்பிரச்சினை விடயத்தில் அனுசரணைத் தரப்பான நோர்வேயைக் கையாள்வதில் இலங்கையின் புதிய அரசுத் தலைமை தொடர்ந்தும் பின்னடைவுகளையே சந்தித்து வருகின்றது.

முதலில், அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெட்டிவிட்டு, அந்த இடத்தில் இந்தியாவைக் கொண்டுவந்து சொருகுவதற்கு புதிய ஜனாதிபதியும், அவரது சார்பில் இலங்கை விடயங்களின் கொள்கை வகுப்பாளர்களும் திட்டம் தீட்டினர். ஆனால் அது பலிக்கவில்லை. நோர்வேயை அனுசரணைப் பணியில் தொடர்ந்து பேணுமாறு இந்தியாவே, இலங்கை அரசுத் தலைமைக்கு 'அன்புக் கட்டளை' யிட்டதை அடுத்து வேறு வழியின்றி 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கணக்கில், நோர்வேயின் கதவைப் போய்த் தட்டியது இலங்கையின் புதிய அரசு.

அத்தோடு அமையவில்லை. நோர்வேத் தரப்பில் இவ்விடயங்களை - அனுசரணைப் பணிகளை - முன்னின்று மேற்கொண்டு வரும் அந்த நாட்டின் தற்போதைய அமைச்சரும், இலங்கை அனுசரணைப் பணிக்கான நோர்வேயின் விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்மை இவ்விடயத்திலிருந்து வெட்டிவிட இலங்கைத் தரப்பில் திட்டம் தீட்டப்பட்டது.

நோர்வேத் தரப்பை 'கட்' பண்ண எடுத்த முயற்சி தோற்றது போலவே, எரிக் சொல்ஹெய்மை ஒதுக்கிவிட எடுத்த இலங்கையின் முயற்சியும் தோற்றுப்போய்விட்டதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

சொல்ஹெய்மை ஓரங்கட்டும் செயற்பாட்டுக்குப் பொறுப்பேற்றவர் புதிய இலங்கை அரசின் புதிய வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர.

தனி மனிதர்களில் தங்கியிராமல், அமைதி முயற்சிகளையும் அதற்கான அனுசரணைப் பணிகளையும் நோர்வே, இலங்கை ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சுகள் மட்டத்தில் கையாளலாமே என்ற யோசனைத் திட்டத்துடன்தான் நோர்வேயை அணுகினார் அமைச்சர் மங்கள சமரவீர. ஆனால், ஆரம்பத்திலேயே அந்த முயற்சிக்கு 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' - பதிலளித்து, அத்திட்டத்தை முறியடித்து விட்டார் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொனாஸ் ஸ்ரோரர் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

நோர்வே வெளிவிவகார அமைச்சையும், அந்த நாட்டு அரசையும் பொறுத்தவரை எரிக் சொல்ஹெய்ம் முக்கியமான அரசியல் பிரமுகர். தற்போது அங்கு புதிதாகப் பதவியேற்றிருக்கும் சிவப்பு - பச்சைக் கூட்டரசின் அச்சாணியாகச் செயற்பட்டு, பல்வேறு கட்சிகளை ஒரு குடையின் கீழ் ஒன்றுபட வைத்து, கூட்டமைப்பை வெற்றிப்பாதையில் அமையச் செய்ததில் சொல்ஹெய்முக்குக் கணிசமான பங்கு உண்டு. வெளிவிவகாரக் கொள்கைகளில் வெவ்வேறு துருவங்களில் நிற்கக் கூடிய பல்வேறு கட்சிகளை அக்கொள்கை விவகாரத்தில் ஒன்றுபட்டு நிற்கவைத்து, 'முரண் பாட்டில் ஐக்கியம்' என்ற சித்தாந்தத்தில் புதிய நோர்வே அரசை ஆக்கபூர்வமான பாதையில் இட்டுச் செல்ல வைத்தமைக்காக அந்நாட்டின் மூத்த அரசியல்வாதியான எரிக் சொல்ஹெய்ம் விதந்துரைக்கப்படுபவர். அத்தகைய ஒருவரை அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சு மூலமே, அவர் இதுவரை ஆற்றி வந்த முக்கியமான பணியிலிருந்து கழற்றிவிட இலங்கைத் தரப்பு முயற்சித்தால் அதற்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு விட்டுக் கொடுக்குமா? இந்த அடிப்படை புரியாமல் முயற்சியில் ஈடுபட்டு மூக்குடைபட்டுப்போய்க் கிடக்கிறார் அமைச்சர் சமரவீர.

அதுமட்டுமல்ல. இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தில் அனுசரணைப் பணி வகித்த விவகாரம் தொடர்பாக நோர்வேயில் முன் அனுபவம் கொண்டவர்கள் மூவர்தான்.

ஒருவர் - எரிக் சொல்ஹெய்ம். மற்றவர் - அந்நாட்டின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன். மூன்றாவது பிரமுகர் - இலங்கைக்கான நோர்வேத் தூதுவராக முன்னர் பணியாற்றிய ஜோன் வெஸ்ட்போர்க்.

இவர்களில் விடார் ஹெல்கிஸன் இடம்பெற்ற முன்னைய நோர்வே அரசு, கடந்த செப்ரெம்பர் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து, ஹெல்கிஸன் நோர்வேயிலிருந்து வெளியேறிவிட்டார். அவரது மனைவி சுவீடன் நாட்டவர் என்பதால் ஹெல்கிஸன் இப்போது சுவீடனில் தனியார் நிறுவனம் ஒன்றில் இயக்குநராகப் பணி புரிகின்றார். அவர் இலங்கை அனுசரணைப் பணிக்கு உதவும் பதவி ஒன்றை ஏற்று சேவையாற்ற வாய்ப்புகள் இல்லை.

அதேபோல, தற்போது புதுடில்லியில் நோர்வேயின் தூதுவராக இருக்கும் ஜோன் வெஸ்ட்போர்க்கும் இப்பொறுப்பை ஏற்கும் சாத்தியம் இல்லை.

ஆகவே, இலங்கை அனுசரணைப்பணி விடயத்தில் முன் அனுபவம் பெற்ற -பொருத்தமான - வேறு பிரமுகர் எவரும் இல்லை என்பதால் எரிக் சொல்ஹெய்மை இப்பொறுப்பிலிருந்து விடுவிக்கும் நிலைமையில் நோர்வேத் தரப்பு இல்லவே இல்லை என்பதுதான் யதார்த்தம்.

அது மட்டுமல்லாமல், இலங்கையில் மேற்படி அனுசரணைப் பணி என்பது ஓர் அரசுக்கும் ஓர் இயக்கத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் வெறும் தொடர்பாடல் என்று நோர்வே கருதவில்லை என அந்த அரசின் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதில் தனி மனிதர்கள், அவர்களுடைய ஆளுமைகள், பங்களிப்புகள், பண்புகள், தீர்மானங்கள், தலைவர்களின் செயற்பாடுகள் எனப் பல விடயங்கள் அடங்கியிருக்கின்றன என நோர்வே கருதுகின்றது.

எனவே, கையாளும் பிரமுகரின் தனித்துவத்திலும் இந்த அனுசரணைப் பணியின் உயரிய மாண்பு தங்கியிருப்பதாகக் கொள்ளும் நோர்வே அரசு, ஆகையால் அந்தப் பணியை முன்னெடுப்பதற்கு வழிகாட்டப்பொருத்தமானவர் எரிக் சொல்ஹெய்மே என்று எண்ணுகிறது.

அனுசரணைப் பணி தொடர்பான பிரமுகர்களுடனும், தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பாடல்களையும் ஆத்மபூர்வமான நட்பையும் பேணிவரும் எரிக் சொல்ஹெய்மே இப்பணியில் நீடிப்பது மிகப் பொருத்தமானது - சாலவும் சிறந்தது - என்று நோர்வே அரசுத் தலைமை முடிவு செய்திருக்கின்றது. புதிய இலங்கை அரசின் தனி நபர்களுக்காகத் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள நோர்வே தயாரில்லை.

எனினும், தமது புதிய பொறுப்புகள் காரணமாக இலங்கை விவகாரத்துக்கு அதிக நேரத்தை ஒதுக்குவதற்கு சொல்ஹெய்மால் முடியாவிட்டால், அவரே தமக்குக் கீழ் உதவியாளர்களை நியமித்து அவர்கள் மூலம் இவ்விடயத்தைக் கையாளலாம் என்ற ஆலோசனை - முடிவு - நோர்வே அரசுத்தலைமை மட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணிகளில் பார்க்கும் போது சொல்ஹெய்மை அனுசரணைப் பணியிலிருந்து ஓரம் கட்டும் இலங்கைத் தரப்பின் எதிர்பார்ப்பு பகற்கனவாகவே முடியும் என்பது உறுதிப்படுகின்றது.

# வடமராட்சியில் கிளைமோர் தாக்குதலின் பின் கைதான நால்வர் பற்றித் தகவல் இல்லை!

## மனித உரிமைக் குழுவிடம் உறவினர்கள் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.29

பருத்தித்துறை, கிராமக் கோட்டடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலின் பின்னர் அப்பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட நான்கு பேர் காணாமற்போயிருக்கின்றனர். அவர்கள் எங்கு உள்ளனர் என்று தெரியாது உறவினர்கள் பீதியடைந்துள்ளனர்.

இவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுத் தருமாறு கோரி உறவினர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு வந்து முறையிட்டிருக்கின்றனர்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த தங்கராசா குகதாஸ் (வயது 31), மார்க்கண்டு திருநீலன் (வயது 24) ஆகிய இருவரும் தலைமுடி வெட்டுவதற்காகப் பருத்தித்துறை நகரப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த சமயம் படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் பற்றிப் பின்னர் தகவல் எதுவும் இல்லை என்று அவர்களது தாய்மார் முறையிட்டிருக்கின்றனர்.

கற்கோவளத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் கமலக்கண்ணன் (வயது 24) என்பவரும் பொருள்கள் வாங்குவதற்காகப் பருத்தித்துறை நகரப் பகுதிக்கு வந்திருந்தசமயம் கைதாகியிருக்கின்றார். இவர் எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்பது தெரியவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

இளம்குடும்பஸ்தர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டபின் காணாமற் போயிருக்கிறார்.

சிவசுப்பிரமணியம் சுதாகரன் (வயது 31) என்ற இந்தக் குடும்பஸ்தர் சம்பவம் நடந்த அன்றுமாலை 5 மணியளவில் வல்வெட்டித்துறை சோடாக் கம்பனி வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

வீட்டைச் சுற்றிவளைத்த படையினர் இவரையும் இவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளையும் சேர்த்துக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்றும் -

பின்னர் மனைவி, பிள்ளைகளை மட்டும் படையினர் விடுவித்தனர் எனவும் கூறப்படுகிறது. கணவர் இன்னமும் வீடு திரும்பவில்லை என்று மனைவி நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார். (ஐ-7)



*வடமராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனோர்களின் தாய், தந்தையர் கண்ணீரும் கம்பலையுமாக நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்வதையே படங்களில் காணலாம்.*

*(படங்கள்:பிரபா)*

# தற்போதைய நிலை நீடித்தால் யாழ்ப்பாணம் சுடுகாடாகிவிடும்

## கண்காணிப்புக் குழு எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.29

தற்போதைய ஆபத்தான நிலை தொடருமானால் யாழ்ப்பாணம் சுடுகாடாக மாறிவிடும்.

- இவ்வாறு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் மார்த் லன்ஸ்ரோம் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் தற்போது ஆபத்தான நிலை காணப்படுகிறது. பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவம் பாரதூரமானது. இச்சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச்சம்பவம் தொடர்பாக எமது பிரதேசப் பிரதிநிதிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இத்தகைய தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். அவை நிறுத்தப்படுமென்றே கருதுகிறோம்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு என்ற வகையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து அதிக கவனம் செலுத்திவருகிறோம்.

தற்போது நிலவும் ஆபத்தான நிலை நீடிக்குமானால் யாழ்ப்பாணம் சுடுகாடாக மாறிவிடும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ)

# குருநகர் மீனவர்கள் மூவரைக் காணோம்

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் கடந்த 22ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற குருநகர் மீனவர்கள் மூவர் வீடு திரும்பவில்லையென்று அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சென்.பற்றிக்ஸ் வீதி, குருநகரைச் சேர்ந்த 48 வயதுடைய ஜோசப்- கிறிஸ் துரைராஜா, தொடர்மாடி குருநகரைச் சேர்ந்த 28 வயதுடைய கி.மரியடொறற்றி, குருநகரைச் சேர்ந்த 48 வயதுடைய சவரியான் சிறிசில்வஸ்டர் ஆகிய மூவருமே காணாமற் போனவர்களாவர். (த-7)

# ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை — விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி டிசெ.31 முதல் ஜனவரி 7 வரை

அச்சுவேலி,டிசெ.29

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் இம்மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

விடைத்தாள் மதிப்பிடும் பணியில் பிரதம பரீட்சகராகக் கடமைபுரிபவர்களுக்கான வழிப்படுத்தல் அமர்வுகள் இம்மாதம் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றன.

விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகள் யாழ். மாவட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

விடைத்தாள் மதிப்பிடும் பணிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்களுக்கான நியமனக் கடிதங்களைப் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க அனுப்பிவைத்துள்ளார். (த-11)

# மின் ஒட்டுத் தொழிலகம் தீயில் எரிந்து நாசம்!

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக மணிக்கூண்டு வீதிப் பகுதியில் உள்ள மின் ஒட்டுத் தொழிற்சாலை ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் தொழிற்சாலையை மூடிவிட்டுச் சென்ற உரிமையாளர் நேற்றுக்காலை வந்து பார்த்தபோதே இந்த அனர்த்தம் தொடர்பாகத் தெரியவந்ததாகக் கூறப்படுகின்றது.

மின் ஒழுக்குக் காரணமாகவே இந்த அனர்த்தம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் -

இராணுவ முகாம் அப்பகுதியில் இருந்தமையினால் எவரும் தீயை அணைக்க முன்வரவில்லை எனவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீ அனர்த்தத்தினால் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான மின்ஒட்டும் உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(த-12)

## நாளை

மார்கழி 15
வெள்ளிக்கிழமை
30.12.2005
திதி: சதுர்த்தசி
முற்பகல்: 11.19 வரை
நட்சத்திரம் : மூலம்
பின்னிரவு : 05.59 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 06.29- 07.59
ராகுகாலம் : 10.59 - 12.29
(யாவும் பழைய நேரப்படி)

# மின்சார பாவனையாளர்களுக்கு சமீபத்திய மழை ஒரு வரப்பிரசாதம்

கொழும்பு,டிசெ.29

மின்சார பாவனையாளர்களுக்கு சமீப காலத்தில் பெய்தமழை ஒரு மறைமுக வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது.

மின்சாரசபையால் தீர்மானிக்கப்பட்டிருந்த மின்சார வரிவிதிப்பு மழையின் காரணமாகத் தாமதமாகியிருப்பதே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

விக்டோறியா, கொத்மலை நீர்த்தேக்கங்களில் மழைநீர் நிரம்பியிருப்பதால் இதுவரை நாளுக்கு 45 மில்லியன் ரூபாவை நட்டமாக இழந்துவந்த மின்சாரசபை அதை ஓரளவுக்கு சரிசெய்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தொழிற்சாலை சம்மேளத்தின் அமைப்பாளர் ஆனந்த நிமலரட்ண கூறியிருக்கின்றார்.

80 மில்லியன் ரூபா கடன் பளுவை சரிக்கட்டுவதற்கென மின்சார வரிகளை அதிகரிப்பதற்கு மின்சாரசபை சில மாதங்களுக்கு முன்னர் தீர்மானித்திருந்தது. தற்போதைய அரசியல் சூழ்நிலைகளாலும் காலநிலையால் ஏற்பட்ட பாதிப்புகளாலும் இத்தீர்மானம் செயற்படுத்தப்படுவது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

விக்டோரியா, கொத்மலை நீர்த்தேக்கங்களில் தற்போது நிறைந்துள்ள தண்ணீர் இன்னும் எட்டு பத்து மாதங்களுக்கு மின்சார உற்பத்திக்கு போதுமானது என்று கருதப்படுகின்றது.

(ப)

## உதயவாக்கு

இரகசியம் என்பது நட்புக்குரிய கற்பு.
- ஓர் அறிஞர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரத்தை அண்டிய பகுதியில் ½ ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K. கரன். T.P. 0779063571.(44582)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகளும், பொம்மேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குஞ்சர் கடை, கேணியடி, கொக்குவில் மேற்கு. T.P. 0773068927. (44566)

## தவறிவிட்டது

பாலசுந்தரம் கோகிலநாத் என்பருடைய அடையாள அட்டையும் (851050043V) பண அட்டையும் பணப்பையுடன் மானிப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். முகவரி: 159, மானிப்பாய் வீதி (ஜன சக்தி காப்புறுதி நிறுவனத்திற்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P. 0714182418. (44573)

பஞ்சலிங்கம் அஜந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. (862113144V) வடமராட்சிப் பகுதியில் 21.12.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779 649061 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். கண்டெடுப்பவர்களிற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (44583)

# போரின் விளிம்பில் இலங்கை; விரைந்து பேச்சை ஆரம்பிக்குக!

## பகிரங்கமாகக் கோருகிறார் எரிக் சொல்ஹெய்ம்



கொழும்பு, டிசெ.29

''இலங்கை தீவு போரின் விளிம்பில் உள்ளது. இந்த நிலைமையைத் தடுக்க பேச்சுகளை உடனே நடத்த வேண்டும்.''

- இவ்வாறு நோர்வேயில் நடைபெற்ற ஆழிப்பேரலை நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்ற நோர்வே யின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை அமைதி முயற்சிக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் பலியான தமிழீழ உறவுகளின் நீங்கா நினைவுகளுடன் பேரலையில் உயிரிழந்த அனைத்து மக்களினதும் ஓராண்டு நினைவுகூரல் கடந்த திங்கட்கிழமை நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றது. அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட ரொம்மன் வளாகத்தில் மாலை 6 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் மண்டபம் நிறைந்த மக்கள் பங்கேற்று ஆழிப்பேரலை காவுகொண்டவர்களை நினைத்து அக வணக்கம் செலுத்தினர்.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ஒஸ்லோ மாநகரசபைத் தலைவர் ஆர்லிங் லா உட்பட்ட நோர்வே அரச பிரதிநிதிகளும் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் எரிக் சொல்ஹெய்ம் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கைத் தீவு மிகவும் நெருக்கடியான நிலைமைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

மீண்டும் போரின் விளிம்பிற்கு அது சென்றுள்ளது. மீண்டும் போர் வெடித்தால் பெரும் உயிரழிவுகளைச் சந்திக்கநேரிடும். அப்படியான நிலைமைக்குள் தள்ளப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டுமாயின் உடனடியாகப் பேச்சு தொடங்குவதன் மூலமே போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவோ, இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகவோ, அல்லது நிரந்தரத் தீர்வு தொடர்பாகவோ பேசமுடியும்.

அதன் மூலமே ஆபத்தான சூழல் உருவாகாமல் தடுக்க முடியும் - என்றார் அவர். அக வணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் நினைவுச் சுடரை எரிக்சொல்ஹெய்ம், தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரெஜி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஆழிப்பேரலை வரலாற்றுச் சோகத்தின் பதிவாக நினைவுக் கல்வெட்டை ரெஜி திரை நீக்கம் செய்துவைத்தார்.

ஆழிப்பேரலையின் பின்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகள் பற்றிய விரிவான விளக்கங்களை ரெஜி ஆங்கிலத்திலும் தமிழிலும் வழங்கினார்.

தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் சர்வமத குருமார் ஆகியோரின் நினைவேந்தல் உரைகளும் இடம்பெற்றன. மேலும் ஞாயிறு அதிகாலை படுகொலை செய்யப்பட்ட தமிழினத்தின் மூத்த அரசியலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தை நினைவு கூரும் வணக்கமும் இந்நிகழ்வில்இடம்பெற்றது.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையை வன்மையாகக் கண்டித்து உரை நிகழ்த்திய ஒஸ்லோ மாநகர சபை உறுப்பினர் யோகராஜா பாலசிங்கம், மக்கள் பிரதிநிதியும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான ஜோசப் பரராஜசிங்கத்தைப் படுகொலை செய்த சிங்கள பேரினவாதத்தின் மிலேச்சத்தனமான செயலை நோர்வே உட்பட அனைத்துலக நாடுகள் கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (க)


## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியரான திரு.ஐ.தேவகிருபாகரன் அவர்களின் அன்புமகன்*

**தேவஅருனின்**

*மறைவுச் செய்தி கேட்டு, அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.*

கல்லூரிச் சமூகம்,
யா/கலாநிதி ஆ.தி.ம.ம.வி.
காரைநகர்.

(44592)(26-16-15-42)


## ஆழியவளைக்குச் செல்லும் வீதிகள் பலத்த சேதம்

தென்மராட்சி,டிசெ.29

வடமராட்சி கிழக்கு, ஆழியவளைச் செல்லும் மூன்று வீதிகளும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்து மூன்று வீதிகளும் பாரிய குன்றும் குழிகளுமாகக் காணப்படுகின்றன.

இவ்வீதிகளில் மிதிவண்டிகளில் கூட பயணிக்க முடியவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தாளையடி - ஆழியவளை வீதி, தாளையடி - பிரதான வீதி, தாளையடி - வாரிவட்டன் வீதி ஆகியவையே சேதமடைந்துள்ளதாகும்.

இவ்வீதிகளில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மருதங்கேணி சந்திவரை நடந்து வந்தே பயணத்தினை மேற்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-117)


## கண்ணீர் அஞ்சலி

*24.12.2005 அன்று அகால மரணமடைந்த எமது கல்லூரியின் காவலாளர்*

**கிருஷ்ணன் விமலேஸ்வரன்** *(செல்வம்)*

*அவருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

நலன்புரிச்சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி.

(44581) (32-15-16-42)


## இருவருக்குத் தீக்காயம்

தென்மராட்சி,டிசெ.29

குப்பை எரித்தபோது சேலையில் தீப்பற்றிக் கொண்டதில் வயோதிபப் பெண்ணும் தீயை அணைக்க முயன்ற அவரது மருமகளும் எரிகாயங்களுக்கு இலக்கானார்கள்.

இச்சம்பவம் கடந்த 26ஆம் திகதி மாலை சாவகச்சேரி கண்டிவீதியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த கனகசபை பராசக்தி (வயது 73) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவரது மருமகளான திருமதி பாலசுந்தரம் (வயது 53) கைகளில் எரிகாயங்கள் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (த-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவதொண்டன் ஜானகியம்மா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி சிவதொண்டன் ஜானகியம்மா 23-12-2005 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவதொண்டனின் அன்பு மனைவியும் குகனேஸ்வரன், விக்கேஸ்வரன், குகனேஸ்வரி, லக்சுமி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் பூதவுடல் கனடாவில் 27-12-2005 அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*முடலன் சீமா,*
*நீலி அம்மனே,*
*மல்லாகம்*

*தகவல்:*
*ஆ.லக்சுமி*
*(பெறாமகள்- மல்லாகம்).*

(44590)(26-16-15-42)

## திருமதி விக்கினேஸ்வரி (ராணி) ஜெயக்குமார்



ஏழாலை வடக்கு, ஊரமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரம்படி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி விக்கினேஸ்வரி (ராணி) ஜெயக்குமார் அவர்கள் நேற்று (28.12.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - செல்லமுத்துவின் மருமகளும் ஜெயக்குமாரின் அன்பு மனைவியும் செந்தூரன், ஆரூரன், தேனுயன் (மாணவர்கள், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் சிவகுமாரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*72/1, பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*

*தகவல்:*
*சி.சிவகுமார் (மைத்துனர்).*

(44585)(15-16-42)

## இராசையா தனபாலசிங்கம்



இருபாலை கிழக்கு, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தனபாலசிங்கம் அவர்கள் 26.12.2005 திங்கட்கிழமை ஜேர்மனியில் சிவபதமடைந்தார்.

அன்னார் இராசையா - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஈஸ்வரியின் அன்பு கணவரும் அருண், நிகிதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசமலர் (இருபாலை), மகாலிங்கம் (தெல்லிப்பழை), செல்வராணி (அராலி), சிவலிங்கம் (கைதடி), காலஞ்சென்ற தனராணி (இருபாலை) மற்றும் சத்தியலிங்கம் (ஜேர்மனி), ஜெயலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இன்று (29.12.2005) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*இருபாலை கிழக்கு, கோப்பாய்.* (44588)(42-15-16)

*தகவல்:*
*தந்தை, தாய்.*


## ENGLISH TEACHING

Pre School - yr.5
Individual Classes will be conducted
by an experienced Teacher
Contact No. **0776174643**
Nallur.

(44579) (21-15-16-42)



## தேவை

**1. சாதாரண தொழிலாளர்கள்**

**வயதெல்லை 40-50 வரை.**

**தனிநபராயின் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.**

*விண்ணப்பிக்கும் முகவரி:*

**பணிப்பாளர்,**
சென்றல் நேசிங் ஹோம்,
*350, பலாலி வீதி, திருநெல்வேலி.*

(44584) (32-15-16-42)


# மரண அறிவித்தல்கள்

## வள்ளிபுரம் குணவதி

காரைநகர், சடையாளியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வள்ளிபுரம் குணவதி நேற்றுமுன்தினம் (27.12.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தன் - பொன்னி தம்பதியரின் அன்பு மருமகளும் கனகேஸ்வரி, அருந்தவநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகநாதனின் மாமியும் சண்முகசுந்தரத்தின் (டென்மார்க்) அன்புச் சகோதரியும் சிவக்கொழுந்து (டென்மார்க்), சின்னம்மா (கனடா)ஆகியோரின் மைத்துனியும் வசீகரனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.12.2005) புதன் கிழமை.பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சடையாளி,*
*காரைநகர்.* (சி/47095)(42-15-16)

*தகவல்:*
*மு.வள்ளிபுரம் (கணவர்).*

## கந்தையா செல்லத்துரை

சுழிபுரம், திசமனையைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மொறட்டுவாவில் வசித்தவருமான கந்தையா செல்லத்துரை 27.12.2005 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் புத்தூர் கிழக்கு காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் டாக்டர் சண்முகதாசன் (லண்டன்), விமலதாசன், நிர்மலா (கொழும்பு), உமாசங்கர் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டாக்டர் திருமதி தனலட்சுமி (லண்டன்), வசந்தா, மயில்வாகனம் (C.E.C.B), சுமதி (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தினேஷ், லிலோஜன், கார்திகா, சஜீவன், மயூரன், அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, அன்னப்பிள்ளை, ஆச்சிமுத்து, நடராசா, தம்பிராசா, செல்லையா மற்றும் லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினசிங்கம் (கனடா), இராசமணி, செல்வமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2005) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் புத்தூர் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.* (44589)(42-15-16)

*தகவல்:*
*மனைவி, மக்கள்,*
*மருமக்கள்.*

# தலதா மாளிகையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தீவிர நடவடிக்கை

ஹாரிஸ்பத்துவ,டிசெ.29

கண்டி தலதா மாளிகையின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் பல திட்டங்களை கண்டிப் பொலீஸார் மேற் கொண்டுள்ளனர்.

தியவர்தன நிலமே பிரதீப்நிலங்கதேவ பண்டாரவின் அங்கீகாரத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

தலதா மாளிகைக்கு முன்பாக உள்ள பிரதான வீதி யால் செல்லும் வாகனங்கள் திடீர் பரிசோதனைக்குள் ளாக்கப்படுகின்றன. அந்த வீதியில் பயணிக்கும் பொது மக்கள் வாவிக்கரை ஓரமாக பயணிக்குமாறு கேட்கப் பட் டுள்ளனர்.

காலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை மட்டுமே இப்பாதை போக்குவரத்துக்காகத் திறந்து வைக்கப்படு கின்றது. இந்த நடைமுறையை கண்டிப்பாக அமுல் செய் யவும் இந்தப் பாதுகாப்பு ஏறபாடுகளின் போது கவனத் தில் கொள்ளப்படுகின்றன.

தலதா மாளிகையினதும் அதன் சுற்றாடலினதும் பாது காப்புக் கருதி விஷேட படையணியொன்று அமைக்கப் பட்டுள்ளமையும் விஷேட அம்சமாகும். (க)

# வவுனியா நகரத்தில் பொலீஸாரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் கைது!

வவுனியா,டிசெ.29

வவுனியா பூங்கா வீதியில் நேற்றுமுன்தினம் பொலீஸார் மீது துப் பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றவர் எனக் கூறப் படும் இளைஞர் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலீஸ் அதிகாரி வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை பதினொன்றரை ... வேக மாகச் சென்ற மோட்டார் சைக்கிளொன்றை இராணுவத் ... தொடர்ந்தனர். நகரசபைச் சந்தியில் இருந்து பூங்கா வீதி ... நோக்கி மிக வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் அவ்விடத்தில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டிருந்த பொலீஸாரால் வழிமறிக் கப்பட்டது.

ஆனாலும், மோட்டார் சைக்கிள் நிறுத்தாமல் சென்றதையடுத்து அதில் பயணம் செய்த இளைஞர் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிர யோகம் செய்தனர் என்று கூறப்படுகின்றது. இதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட இளைஞரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும் அதில் பொலீஸார் சிலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட் டது.

இதனையடுத்து இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து வைரவப் புளியங்குளம் பகுதியில் தேடுதல் நடத்தினர். இதன் போதே சந்தேகநபரான இளைஞர் கைது செய்யப்பட்டார். வவுனியா பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்ற னர்.

(க-3)

# ஜோசப் எம்.பியின் படுகொலை குறித்து ஐரோப்பிய நாடுகள் விசனம் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்தவ தேவாலயத்திற்குள் கிறிஸ்மஸ் தினத்தன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பிலிருக்கும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் அதிருப்தியும், விசனமும் தெரி வித்திருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட நோர்வே தூதுவர் ஹான்ஸ் ரட்ஸ்கார், பிரிட்டிஸ் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ் மற்றும் சுவிட்ஸர் லாந்து தூதுவர் ஆகியோர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்தான தமது நாடுகளின் அனுதாபங்களைத் தெரிவித்திருக்கும் தூதுவர்கள் இச்சம்பவம் குறித்தான விவரங் களைக் கேட்டறிந்துகொண்டனர்.

இதேவேளை, வியட்நாமுக்கான விஜயமொன்றை மேற்கொண் டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக் கிரமசிங்கவும், தொலைபேசியூடாக சம்பந்தன் எம்.பியுடன் தொடர்பு கொண்டு தமது அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

(க)


Direct Start

O/L பரீட்சைகளின் பின்...



1 Diploma in Microsoft Office DMO — 4 months
2 Diploma in Computer Programming DCP — 4 months
3 Diploma in Desktop Publishing DTP — 3 months
4 Diploma in Web Design DWD — 4 months
5 Diploma in Computerised Accounting DCA — 3 months

Registered with Ministry of Vocational Education

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !
- 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
- அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
- ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இலவச பாடப் புத்தகங்கள்
- Transfer Facility
- தவணை முறைக் கட்டணங்கள்

Free Study Packs

ICM ENGLAND Recognised Certification

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, Tel : 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587 |



20+ YEARS CONTRIBUTION TOWARDS e-Sri Lanka by IDM Nation's ICT Academy Affiliated University College

இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் தகவல் தொழில்நுட்பக் கல்வியில் முன்னணி நிறுவனமாக சாதனை படைத்துவரும்

IDM
Nation's ICT Academy
Affiliated University College

இலங்கை முழுவதும் 29கிளைகளைக்கொண்ட எமது நிறுவனம் இன்று தகவல் தொழிநுட்பத்துறையில் மாணவர்களுக்குப் பல்வேறு கணனிக்கற்கை நெறி வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இதுவரை காலமும் கொழும்பிற்குச் சென்று பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் IDM இல் கல்வி கற்ற எமது மாணவர்கள் இன்று யாழ்.குடாநாட்டிலேயே கணனிக் கல்வியைத் தொடர்கின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் எமது நிறுவனத்தில் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பு (மூலிபரீ ஊையிழிஉளதுளஐமி) ஏற்படுத்தித் தரப்படும்.

பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் இணைந்த எமது நிறுவனம் குறுகிய காலத்தில் பல சர்வதேசக் கணனிக் கற்கை நெறியான Short Term Courses, Professional Level Courses, Degree Level Courses என்ற மூன்று பிரிவுகளாக சர்வதேச சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் எமது யாழ். மாணவர்களுக்கு கணனிக்கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது. எமது நிறுவனத்தின் உண்மைத் தன்மையும் வளர்ச்சியும் மாணவர்கள் அறிய வேண்டும் என்ற நோக்குடன் எமது www.idm.lkஎன்ற இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் எமது நிறுவனம் சர்வதேச தரம் வாய்ந்ததா? என்பதனை அறியமுடியும்.

இவ்வருடம் O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவசக் கணனி வழிகாட்டல் கருத்தரங்கு யாழ். மாணவர்களுக்கு இன்று (29.12.2005)வியாழக்கிழமை காலை 10 மணி க்கு யாழ். நாவலர் மண்டபத்திலும் வடமாராட்சி மாணவர்களுக்கு 30.12.2005 காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் எமது நிறுவனத்தினால் நடாத்தப் பட இருப்பதனால் அனைவரையும் பங்கு பற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

IDM e-KIDS

உங்கள் மழலைச் செல்வங்களை சிறு பராயம் முதலே கணனித்துறையில் இணைத்து அதன் மூலம் கணனி பட்டதாரியாக்க இலகுவழி இதோ!

Our Course Advancement Chart




IDM Branch NetWork (29)






IDM INTERNATIONAL AFFILIATIONS

No.216, NAVALAR ROAD, JAFFNA. T.P: 021 4591398. Web :- www.idm .lk - www.idm.edu



கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாறு குறித்த நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கல்லூரியின் முன்னாள் அதிபர் 'சுடர்' இ.மகேந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும், நூலின் முதற்பிரதியை சட்டத்தரணி செல்வி. ஆ. சிவஞானசுந்தரமும் சிறப்புப் பிரதியை யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கமும் பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியர் க. இரட்ணப்பிரகாசத்திற்கு கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன், கவிதரன்)

# விதிகளை மீறும் மருந்தகங்கள் மீது விரைவில் கடும் சட்ட நடவடிக்கை

வலி.தென்மேற்கு,டிசெ.29

விதிகளை மீறும் மருந்தகங்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சு.சிவகணேஷ் எச்சரித்துள்ளார்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் தனியார் மருந்து விற்பனை நிலயங்கள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். சு. சிவகணேஷ் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்தார்.

அங்கு அவர் கூறியதாவதுஃ

வலி.மேற்கு மற்றும் வலி.தென் மேற்குப் பிரதேசங்களில் இயங்கி வரும் சகல மருந்தகங்கள் மற்றும் மருந்து விற்பனை நிலையங்கள் உரிய அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கவேண்டும். அத்துடன், அங்கு தகைமை வாய்ந்த மருந்தாளர் அல்லது மருந்தாளருக்கான பயிற்சியை பெற்றவர்கள் கடமையாற்றவேண்டும். இந்த விதிமுறைகளை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

இப்பிரிவிலுள்ள மருந்தகங்கள், தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

சுகாதார அமைச்சின் சட்ட வசதிகளுக்கு முரண்பட்டவிதத்தில் செயற்படும் மருந்தகங்கள் மற்றும் தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதால், இச்சட்ட விதிகளைச் சரிவரப் பின்பற்றி செயற்பட வேண்டியது அவசியம் என்று இக்கலந்துரையாடலின் போது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். சு.சிவகணேஷ் மேலும் தெரிவித்தார். (ஒ-135)

## கிணற்றடியில் துலா வீழ்ந்து பெண் காயம்

தென்மராட்சி,டிசெ.29

கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது துலா முறிந்து தலையில் வீழ்ந்ததில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தே.தங்கலட்சுமி (வயது 36) என்பவரே இதில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

# சட்டவிரோதமான மணல் அகழ்வு நாவற்குழியில் மீண்டும் அதிகரிப்பு

கைதடி,டிசெ.29

சட்டவிரோத மணல் அகழ்வு நாவற்குழிப் பகுதியில் மீளவும் இரவு பகலாக நடைபெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

நாவற்குழி இறால் பதனிடும் தொழிற்சாலைக்கு மேற்குப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தினமும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. லான்ட் மாஸ்டர், மற்றும் உழவு இயந்திரங்களில் மணல் எடுத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அப்பகுதியில் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தச் செல்லும் பொதுமக்கள் மணல் ஏற்ற வருபவர்களால் வாள், கொட்டன் கொண்டு அச்சுறுத்தப்படுகின்றனர்.

இவர்களின் அடாவடித்தனங்களை அரச உயர் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்தவேண்டும் எனவும் நாவற்குழி மக்கள் கோருகின்றனர்.

பதற்ற நிலை தோன்றியுள்ளதை வாய்ப்பாகப் பயன்படுத்தியே மணல் அகழ்வு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-75)

# பாலப் புனரமைப்பு முடக்கம்; அதனால் விளைநிலம் பாதிப்பு

வரணி,டிசெ.29

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் முள்ளிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இரு பாலங்களைப் புனரமைக்கும் பணி தாமதமாவதால் வரணி கிழக்குப் பகுதியில் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக இடைக்குறிச்சி விவசாய சம்மேளனம் வீதி அதிகார சபைக்குச் சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சம்மேளனம் தெரிவித்துள்ளதாவது:-

குறிப்பிட்ட இரு பாலங்களின் கட்டுமானப் பணிகளும் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அப்பணிகள் இதுவரை பூர்த்தியாகவில்லை. இப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பமானபோது ஒரு பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதைக்குத் தண்ணீர் மறுபுறம் பாய்வதற்கான குழாய்கள் வைக்கப்படவில்லை. மற்றைய பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதைக்கு வைக்கப்பட்டுள்ள குழாய்கள் பால அமைப்பின் போது அகழப்பட்ட மண்ணால் மூடப்பட்டுள்ளன. இதனால், இரண்டு பாலப் பகுதியூடாகவும் தற்சமயம் தண்ணீர் பாய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வரணி கிழக்குப் பகுதியில் உள்ள கரவில், மாவில், தீணிக்கிராய், வண்ணான் வயல் போன்ற இடங்களில் உள்ள விளைநிலங்களில் தங்கும் மேலதிக வெள்ளநீர் இப்பாலங்களினூடாகக் கடத்தப்பட்டு தொண்டைமானாறு கடனீர் ஏரியை அடைவது வழக்கமாகும். அண்மையில் பெய்த மழையின்போது வெள்ளம் பாலங்களினூடாகப் பாய முடியாததால் 225 ஏக்கர் வயல் நிலம் வெள்ளத்தினால் அழிந்துள்ளது என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-170)

# வீடு புகுந்து திருடியவர் கைது!

தென்மராட்சி,டிசெ.29

பட்டப்பகலில் வீட்டுக்குள் புகுந்து தங்க நகை, பணம் ஆகியவற்றைத் திருடிய நபரை பொலீஸார் கைதுசெய்தனர்.

கடந்த 15ஆம் திகதி பகல் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடன் அங்கிருந்த தங்கச் சங்கிலியையும் ஒரு தொகை ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றான்.

இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து பொலீஸார் திருடனைக் கைதுசெய்தனர். (ஒ-117)

# கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

அரியாலை,டிசெ.29

நீர்வேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நாய்கள் பாதசாரிகளைக் கடிக்கின்றன என்றும் -

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் விபத்துக்கு இலக்காக நேரிடுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. கட்டாக்காலி நாய்கள் நீர்வேலி தெற்குப் பகுதியிலேயே அதிகளவில் காணப்படுகின்றன.

இவற்றைப் பிடித்தழிப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபையினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-17)

# மானிப்பாயில் ஆதனமதிப்பீடு மேற்கொள்ளும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.29

கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக மானிப்பாய் கிராமத்தில் ஆதன மீள் மதிப்பீடு இடம்பெறவில்லை. எனவே 15 வட்டாரங்களைக் கொண்ட மானிப்பாய் கிராமத்தில் ஆதன மீள்மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர், யாழ்.அரச அதிபரிடம் வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் ஊடாகக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது- மானிப்பாய் கிராமம் கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக ஆதன மீள்மதிப்பீடு இன்றி உள்ளது. இந்த விடயம் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

மேலும் பழைய ஆதன மதிப்பீட்டினால் குறிப்பிடத்தக்க வருமானம் பிரதேச சபைக்குக் கிடையாதுள்ளது. இதனால், பிரதேச சபை வளர்ச்சி - அபிவிருத்தித் தேவைகளை முன்னெடுத்துச் செல்லமுடியவில்லை.

எனவே, மானிப்பாய் கிராமத்தின் கீழான 15 வட்டாரங்களிலும் யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களம் ஊடாக ஆதன மீள்மதிப்பீடு செய்துதருமாறு கோருகின்றோம். அதற்கான ஆளணியினரையும், செலவினங்களையும் எம்மால் தந்து உதவ முடியும்.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவுக்கும் இதன் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-185)






திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், வர்த்தகர் சங்கம், பொற்பதி விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து அண்மையில் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடத்திய இரத்த தான நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். அந்த இரத்ததான நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

## மரத்திலிருந்து விழுந்தவருக்கு கால் முறிந்தது

மரத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞருக்குக் கால் முறிந்தது. இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கு.விஜயகுமார் (வயது 27) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஒ-117)

## கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை வலய லயன்ஸ் கழகங்கள் இணைந்து விழிவெண்படத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தவுள்ளன.

இப்பரிசோதனை முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிதொடக்கம் கொக்குவில் மேற்கு சுப்பிரமணியம் மாலதி ஞாபகார்த்த ஆரம்ப சுகாதார முன்பள்ளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளார். (த-202)

# அனுமதியின்றி கட்டிய கட்டடங்களுக்கு பிரதேச சபையின் சேவை கிடைக்காது

## முல்லை. பிரதேச விசேட ஆணையாளர் எச்சரிக்கை

புதுக்குடியிருப்பு,டிசெ.29

கரைதுரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்குப் பிரதேச சபையின் சேவைகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்று முல்லைத்தீவு பிரதேச விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

பிரதேச சபையின் சட்ட திட்டங்களை மீறி கட்டடங்கள் துரிதமாக அமைக்கப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்படக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பாக முல்லைத்தீவுப் பிரதேச விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை மேலும் கூறியதாவது:-

பிரதேச சபையின் பிரமாணங்களுக்கும் சட்ட விதிமுறைகளுக்கும் அமைவாகவே எந்தவொரு கட்டடமும் கட்டப்படவேண்டும். இதுதொடர்பாக பல தடவைகள் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டதுடன், கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கோருவதற்கான விண்ணப்பங்களும் பிரதேச சபையால் வழங்கப்பட்டன. அவை பூரணப்படுத்தப்பட்டு இன்று வரை மீள ஒப்படைக்கப்படவில்லை.

ஆனால், எமது சட்ட திட்டங்களை ஏற்றுக்கொள்ளாது - பலர் புதிதுபுதிதாகப் பல கட்டடங்களை அமைத்து வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் எம்மால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். இதனைத் தவிர்க்கும் முகமாகப் பிரதேச சபையிடம் அனுமதிபெற்று கட்டடங்களைக் கட்ட சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதனையும் மீறி செயற்படுபவர்களுக்கு பிரதேச சபையால் வழங்கப்படும் எந்தவொரு சேவையும் கிடைக்கமாட்டாது - என்றார் அவர். (ஒ-6-353)

# கிளிநொச்சி வைத்தியசாலை மருத்துவ சங்கத்தின் புதிய நிர்வாகம்

பரந்தன்,டிசெ.29

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மருத்துவ சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய தலைவராக வைத்திய கலாநிதி இ.சதானந்தனும் துணைத் தலைவர்களாக டாக்டர் கா.சுஜாந்தன், டாக்டர் சி.சிவதாஸன் ஆகியோரும் செயலாளராக டாக்டர் ஜீவாவும் துணைச் செயலாளராக டாக்டர் அ.திலீபனும் பொருளாளராக டாக்டர் மா.குகராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 9 பேரும் தெரிவாகினர்.

இதேவேளை, இச்சங்கத்தின் போசகர்களாக வைத்திய நிபுணர் ச.ஜெயராசா, வைத்திய நிபுணர் றொபேட் பெஞ்சமின், அறுவைச் சிகிச்சை நிபுணர் றொபேட் ரெயிலர் மற்றும் வைத்திய கலாநிதி கே.நந்தகுமார் ஆகியோர் சேவையாற்றுவர். (ஒ-6-352)

## கண்டாவளையில் வீடமைப்புப் பணி

பரந்தன்,டிசெ.29

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின்கீழ் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஐந்து கிராமங்களில் வீடுகள் அமைக்கும் பணி மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உமையாள்புரம் கிராமத்தில் விளாவோடைப் பகுதியிலும் ஊரியான் கிராமத்தில் புதுக்குளம், பழைய கோரக்கன்கட்டு பகுதிகளிலும் -

முரசுமோட்டைக் கிராமத்தில் முதலாம் யூனிற் பகுதி, ஐயன்கோயில், பழைய பண்ணை ஆகிய பகுதிகளிலும், கண்டாவளையில் மடுப்பகுதியிலும் பரந்தனில் பரந்தன் மேற்குப் பகுதியிலும் இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று கண்டாவளைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-6-352)

# மருத்துவ உரிமம் பெறுமாறு சுகாதார சேவை அறிவுறுத்து

கிளிநொச்சி,டிசெ.29

தமிழர் தாயகப் பகுதிகளில் இயங்கும் அனைத்துத் தனியார் மருத்துவச் செயற்பாட்டு நிலையங்களும் 2006ஆம் ஆண்டிற்கான தமிழீழ சுகாதார சேவைகளின் மருத்துவ உரிமம் பெறவேண்டும் என்று சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். இதற்கென அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதிக்கு இடையில் தத்தமது மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கா. ஓவியன் கேட்டுள்ளார்.

தனியார் ஆங்கில மருத்துவ சிகிச்சை நிலையங்கள், ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள், சுதேச ஹோமியோபதி அக்குபஞ்சர், யுனானி மருத்துவ சிகிச்சை நிலையங்கள், ஆங்கில மருத்துவ ஆலோசனை நிலையங்கள், சுதேச மருத்துவ ஆலோசனை நிலையங்கள், விஷகடி, முறிவு நெரிவு சிகிச்சை நிலையங்கள் - பற்சிகிச்சை, கண் சிகிச்சை, விசேட மருத்துவ சிகிச்சை மருத்துவ ஆய்வு கூடங்கள், பல்கட்டுமிடம், கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குமிடம், சுதேச மருந்து விற்பனை நிலையங்கள், நடமாடும் ஆங்கில சுதேச மருந்து விற்பனைகள், சுதேச மருந்து தயாரிப்பு நிலையங்கள், ஆங்கில மருந்து தயாரிப்பு நிலையங்கள், மருந்து விற்பனை முகவர்கள் உள்ளிட்ட அனைத்து தனியார் மருத்துவச் செயற்பாட்டு நிறுவனங்களும் 'மருத்துவ உரிமம்' பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் (கறுக்காய்க் குளம்), வவுனியா (புளியங்குளம்) ஆகிய மாவட்டங்களின் சுகாதாரப் பணிமனைகளில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-6)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் மூவருக்கு இடமாற்றம்

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் அவரது அலுவலகத்தைச் சேர்ந்த இரு உத்தியோத்தர்களும் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த நான்கு வருடங்களாக கூட்டுறவு ஆணையாளராகக் கடமையாற்றிய சி.மோ.சிவமயம் திருகோணமலையில் இயங்கும் தலைமைக் காரியாலயத்திற்கும் -

அந்த அலுவலகத்தைச் சேர்ந்த அ.மரியாம்பிள்ளை மன்னார் மாவட்ட அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் வே.ஸ்ரீஸ்கந்தராசா யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக சோ.குமாரவேல் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் நா.கணபதிப்பிள்ளை, வ.செல்வசோதி, வ.கையிலைநாதன் மற்றும் பொ. மோகன் ஆகிய நான்கு உத்தியோகத்தர்களும் அவ்வலுவலகத்திற்கு மாகாண சபையால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (த-6-353)



கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையில் பயிற்சிபெற்ற முதலுதவி அணியினரைப் படத்தில் காணலாம். இவர்கள் பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றார்கள். (படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர் )

# தரம் 8 ஆசிரியர்களுக்கு புதியபாட செயலமர்வு நாளை

வட்டக்கச்சி,டிசெ.29

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தரம் 8இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட செயலமர்வு இன்று புதன் கிழமை முதல் இருதினங்கள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளன.

புவியியல், வரலாறு, குடியியல் கல்வி ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகளே நடைபெறவுள்ளது. இதில் குறித்த பாடங்களைக் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களைப் பங்குபற்றச் செய்யுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுள்ளார்.

இச்செயலமர்விற்கு சமூகம் தரும் ஆசிரியர்களுக்கே கண்ணிவெடி விழிப்புணர்வு பற்றிய பயிற்சியும் அளிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-405)

# கடலுணவு சந்தைப்படுத்தல்; மன்னாரில் பயிற்சி வகுப்பு

பரந்தன்,டிசெ.29

'ஐ.எல்.ஏ' மற்றும் 'டானிடா' நிறுவனங்களின் ஒரு லட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் கடல் உணவு சந்தைப்படுத்தலுக்கான பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட ஆறு கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் கடல் உணவினை சந்தைப்படுத்தக் கூடிய தலா இரண்டு பயனாளிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

கடலுணவைக் கொண்டுசென்று விற்பனை செய்வதற்காக துவிச்சக்கரவண்டி மற்றும் மீன் பெட்டி, தராசு போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டன. (த-352)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட முதியோருக்கு உதவிகள்

ஆழிப்பேரலையின் ஓரா[illegible] நி[illegible]வு தின நிகழ்வை முன்னிட்டு முல்லை[illegible]குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கினார்.

கடந்த 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் வைத்து இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்திலே 300இற்கு அதிகமான 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் பயன் பெற்றுள்ளனர். (த-352)

## இடைநிலை ஆசிரியர்களுக்கு வதிவிடப் பயிற்சிநெறி

புதுக்குடியிருப்பு,டிசெ.29

முல்லைத்தீவு வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற இடைநிலைக் கல்வி ஆசிரியர்களுக்கு 10 நாள்கள் வதிவிடப்பயிற்சி நடைபெற்றது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் கடந்த 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நடைபெற்ற இந்த முன் சேவைப் பயிற்சியில் சுமார் 40 ஆசிரியர்கள் பங்குபற்றினர்.

ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் கா.சுகுமார் இப்பயிற்சியை நெறிப்படுத்தினார். (த-353)

## கோரக்கன்கட்டில் சுயதொழில் கடன்

பரந்தன்,டிசெ.29

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் உதவியுடன் கோரக்கன்கட்டு கிராமத்தில் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கப்பட்டது.

கோரக்கன்கட்டு கிராம அலுவலர் அலுவலகத்தில் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன பிரதேச இணைப்பாளர் செ.சுமித்திரா தலைமையில் நடைபெற்ற கடன் வழங்கும் நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தொழில்களின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றினார்.

பின்னர் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன திட்டக் கண்காணிப்பாளர் க.றஞ்சினி திட்டச் செயற்பாடு, தொழில்களின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துகளை வழங்கினார்.

தொடர்ந்து பயனாளிகளுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. (த-352)

## புதுக்குடியிருப்பில் நுளம்பு பெருக்கம்

புதுக்குடியிருப்பு,டிசெ.29

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையை அடுத்து நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, மாவட்டத்தின் குளங்கள், குட்டைகள் யாவும் நீர்நிறைந்துள்ளதுடன், பல இடங்களில் நிலத்தடி நீர்ஊற்று எடுத்துப்பாய்ந்துவருகிறது.

இதேவேளை, ஆங்காங்கே நீர் தேங்கி நிற்பதால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன் நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (எ-353)

## மனித உரிமைகள் குறித்து வவுனியாவில் கருத்தமர்வு

வவுனியா,டிசெ.29

பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகளிற்கான கருத்தாடல் நிகழ்வொன்று கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தமிழ்ப் பிரதேச செயலாளர் காரியாலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் திருமதி சகுந்தலா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பாக சட்டத்தரணி என்.சுதர்ஷன் கருத்துரைகளை வழங்கினார்.

தொடர்ந்து பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகளும் சமூகத்தில் அதன் பிரிக்க முடியாத தனிமையும் என்ற தொனிப்பொருளில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்விப் பிரிவு அதிகாரி கபிலன் உரை நிகழ்த்தினார்.

இதில் சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களில் பணியாற்றும் பலரும் பங்குபற்றிப் பயன்பெற்றனர். (த-6-164)

## பார ஊர்திகள் கூ.சங்க கூட்டம்

கிளிநொச்சி,டிசெ.29

வட பிராந்திய பார ஊர்திகள் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பரந்தனில் உள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



நாகம்மாள் வீதி, உடுவில் கிழக்கு
சுன்னாகத்தைச் சேர்ந்த **தனுஷ், பகீரதன்**
ஆகியோரின் தந்தையான

*அமரர்*

**மாணிக்கம் செல்வரத்தினம்** *(செட்டி)*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*மருதனார்டம்,*

K.விஜியகுமார்(விஜயன்),
K.கௌதமன்(கமல்),
J.ஜெயராசா (பெரியவன்),நண்பர்கள்.

(44635)(26-16-15)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
14 - 07 - 1946



விண்ணில்
21 - 12 - 2003

**அமரர் சரவணமுத்து சிவானந்தம் (குஞ்சுமணி)**
(திதி:திரயோதசி )

*ஈராண்டு ஆனாலும் – அப்பா*
*உம்மை நினைத்து – எம்*
*ஈரவிழிகள் இன்னும் ஆறவில்லை*
*ஆத்மா சாந்தியடைய*
*மருதடி விநாயகனைவேண்டுகின்றோம்*
*ஓம்சாந்தி ! சாந்தி !!சாந்தி !!!*

சிவலக்ஷனா பவனம்,
கோவிலாக்கண்டி,
கைதடி.

தகவல்:
S.சிவசுதன், *(மகன்-சுவிஸ்)*.

(44569)(26-16-15)

## மரண அறிவித்தல்

### கந்தையா திருநாவுக்கரசு

**(ஓய்வுபெற்ற கணக்காளர், அரசாங்க அச்சகம், கொழும்பு)**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 74, மேபீல் றோட், கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு 27.12.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், வேலணை காலஞ்சென்ற பண்டிதர் பொன்னுத்துரை-நாகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு) அருமைக் கணவரும், காலஞ்சென்ற திருமதி மீனாட்சி கந்தசாமி, தர்மலிங்கம் மற்றும் திருமதி செல்லம்மா சுப்பிரமணியம், திருமதி அன்னப்பிள்ளை கனகசபை , திருமதி சிவக்கொழுந்து மதியாபரணம், இராசேந்திரம் (கனடா), நற்குணராஜா (பிரான்ஸ) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலியாணசுந்தரம், திருமதி கமலாதேவி தர்மலிங்கம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, டாக்டர் விமலேந்திரன்(கனடா), பாலேந்திரன் (கனடா),விமலாதேவி விஜயகுமார் (கனடா), யோகேந்திரன் (U.K), இரவீந்திரன் (U.K), புவனேந்திரன் (U.K), நிர்மலாதேவி லோகராஜ் (கனடா) மற்றும் காலஞ்சென்ற வத்ஸாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து 01-01-2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஜெயரட்ணம் மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொ.பே.011 2385224

**தகவல்:**
திருமதி.அ.கனகசபை(சகோதரி),
*(பொன்னம்மா ரீச்சர்)*.

(44580)(26-16-15)

## யாழ். தாக்குதலை அடுத்து பங்குச்சந்தை வர்த்தகம் திடீரெனப் பெரு வீழ்ச்சி

கொழும்பு,டிசெ.29

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத்தாக்குதல் சம்பவத்தையடுத்து கொழும்பு பங்குச் சந்தை பெரும் பின்னடைவைக் கண்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இரண்டரை மணிக்குப் பங்குச் சந்தை வர்த்தகம் நிறைவுற்றபோது அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 1880.2 ஆக இருந்தது. இது முன்னைய நாளைவிட 153.2 புள்ளிகளால் குறைந்து - 7.53 வீத பின்னடைவு நிலையாகும்.

கடந்த 21 மாத காலத்துடன் ஒப்பிடுகையில் பங்குச் சந்தை கண்ட மோசமான பின்னடைவு இதுவெனக் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் தாக்குதலொன்று இடம்பெற்றதாகச் செய்திகள் வெளிவந்த பின்னர் பங்குச் சந்தை இவ்வாறு சரிவைச் சந்தித்ததாகப் பங்கு வர்த்தகரொருவர் தெரிவித்திருக்கிறார். (க)

## தமிழ் இளைஞர் வெட்டிக்கொலை

கொழும்பு,டிசெ.29

கொழும்பு ஆமர் வீதி, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில், சுகததாஸஅரங்கின் அருகே தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

சண்முகதாஸன் கண்ணன் என்ற தமிழ் இளைஞரே கொல்லப்பட்டவராவர்.

குற்றச் சம்பவமொன்று தொடர்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் நண்பரொருவரைச் சந்திப்பதற்காக வந்துகொண்டிருந்தபோதே இவர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தந்தில விஜேசிங்க தலைமையிலான பொலீஸ் குழு இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது. (க)

## மக்கள் வங்கி ஊழியர் தெரிவு

வேலணை,டிசெ.29

யாழ்.மாவட்டத்தில் இருந்து மக்கள் வங்கி அலுவலக உதவியாளர் தரத்தில் பணியாற்றிய ஆறு பேர்ஆளணி உதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளையில் இருந்து ஒருவரும் அச்சுவேலிக் கிளையில் இருந்து ஒருவரும் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் இருந்து ஒருவரும் கன்னாதிட்டி தலைமைக் கிளையில் இருந்து இரண்டு பேரும் இதற்கான பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் பணி இடங்களும் தெரிவு செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகின்றது. (ஒ-167)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எனது குருநாதர்
Dr.K.S. பரஞ்சோதிநாதர் அவர்களின்
பாரியார் - பிரபல வைத்தியர்

**Dr.(MRS) கிருஷ்ணவேணி பரம்சோதிநாதர்**

அவர்கள் 28-10-2005 ஆம் திகதி அரச வைத்திய சபையால் நடத்தப்பட்ட வைத்தியர்களுக்கான பரீட்சையில் முதன்மைச் சித்தி அடைந்தமையை அறிந்து பெருமகிழ்ச்சி அடைவதோடு மனமாரப் பாராட்டி வாழ்துகின்றோம். இவரின் கடந்த கால வைத்திய சேவையில் பெற்ற வெற்றிகளுடன் மேன்மேலும் பல சித்திகளைப் பெற்று மக்களுக்கு சேவையாற்ற வேண்டு மென எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிராத்திக்கின்றோம்.

(44575)(26-16-15)

*வாலை அம்மன் மெஞ்ஞான*
*வைரவர் கோயிலடி,*
*அராலி கிழக்கு.*

Dr.ஐயாத்துரை கண்ணா குடும்பத்தினர்,
நாகஜோதி வைத்திய நிலையம்.

NOW ON SALE

**SCIENCE AND TECHNOLOGY IN ENGISH**



GRADE - 7
**WORK BOOK - WITH ANSWERS**
**2005 AND AFTER**

**EDITED BY:**
**S.ANTON** (S.L.P.S-I)

publishers:
**Sri SUBRAMANIA BOOK DEPOT**
235, K.K.S ROAD, JAFFNA.

(C/47086)

**PRINCIPAL REQUIRED**

Applications for the post of Principal to our CHANDRAN INTERNATIONAL SCHOOL (Primary Section) at Kilinochchi are invited. Very attractive salary will be paid. Lodging could be provided in our school quarters. Please send your CVs with copies of supporting documents to reach us on or before 17.01.2006.

The Director
Chandran International School
Jaffna Road,
Kilinochchi

(C/47089)

## முக்கிய அறிவித்தல்

### வருடாந்த பொதுக் கூட்டம் - 2005

எதிர்வரும் 2005.12.31 ஆம் நாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால் உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், சாரதி/ நடத்துநர்களையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
**கோ.கஜேந்திர்சிங்கம்**
*வ.பி.பா.ஊ.கூ.சங்கம்,*
*பரந்தன்.*

செயலாளர்
**சி.இரத்தினாகரன்**
*வ.பி.பா.ஊ.கூ.சங்கம்,*
*பரந்தன்.*

(சி-47088) (21-26-15-16)




யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்

**Style Park**

Perfect Collection

**ஸ்ரைல் பார்க்**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள் அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்



No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் முயற்சிகளுக்கு எதிராகப் புயலாகச் சுழன்றடித்தவர் ஜோசப் ஐயா

## கிளிநொச்சி அஞ்சலி நிகழ்வில் தமிழ்ச்செல்வன் இரங்கல் உரை

கிளிநொச்சி,டிசெ.29

சமாதான காலத்தில் தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்காக சிங்கள தேசத்தின் இனவாதிகள் எங்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தபோது அதற்கு எதிராகப் புயல்போன்று சுழன்றடித்துத் தேசியத்தைக் காக்கச் செயற்பட்டவர் ஜோசப் ஐயா.

- மறைந்த ஜோசப் பரராஜசிங்கம் எம்.பிக்கு இவ்வாறு புகழாரம் சூட்டினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று பெருந்திரளான மக்கள் கூடியிருக்க அஞ்சலி வைபவத்தில் தமிழ்ச்செல்வன் இரங்கலுரை ஆற்றினார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

இன்று தமிழ்த் தேசியமானது விழுதுவிட்டு பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இந்தத் தேசியத்தை அழிப்பதற்கு - சிதைப்பதற்கு - எடுக்கின்ற முயற்சிகள் அல்லது விருட்சத்தைத் தறிப்பதற்கு அவர்கள் செய்கின்ற அந்தக் காரியங்கள் எல்லாமே அவர்களுடைய எதிர்விளைவு. அது அவர்களையே சென்றடையும். ஒருபோதும் தமிழ்த் தேசியத்தை எவராலும் அழிக்கமுடியாது.

இன்று தமிழினம் ஒன்றுபட்டு முழுப்பலத்துடன் நிற்கின்றது. இன்று இந்த ஜோசப் ஐயாவின் இறுதி நிகழ்வு ஸ்ரீலங்கா தேசத்திற்கும் உலகத்திற்கும் தெளிவாக ஒன்றை எடுத்துக்காட்டும் என்று நான் நம்புகின்றேன்.

இன்று இந்த இலங்கைத் தீவிலே தமிழீழ தேசத்தின் மக்களின் பிரதிநிதிகளும் ஸ்ரீலங்காவில் இருக்கின்ற எங்களுடைய சகோதர மக்களுடைய தலைவர்கள் எல்லோருமே வருகைதந்து, ஒன்றுபட்டு இந்த நிகழ்வில் தங்களுடைய சோகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிகழ்வு ஒன்றைப் புரியவைக்கவேண்டும்.

தமிழினத்தைக் கூறுபோட்டு தமிழர்களுடைய சக்தியை - பலத்தை - பலவீனப்படுத்தி தமிழ்த் தேசிய உணர்வை, ஒன்றுபட்ட பலத்தைச் சிதைக்க முற்படுவது ஒருபோதும் வெற்றி அளிக்காது. நீங்கள் செய்வது - எம்மீது தொடுப்பது - எங்கள் இனத்தின் மீது தொடுப்பது எல்லாமே ஒரு 'பூமராங்' போன்றவையே என்றுதான் நான் நினைக்கின்றேன். அது நிச்சயமாக உங்களுக்கே திருப்பிவந்து அழிவைத் தேடித்தரும். ஆகவே, தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுங்கள். அதனால், ஏற்படுகின்ற பாரிய விளைவுக்கு நீங்கள் முகம்கொடுத்துக்கொண்டு இருக்கின்றீர்கள். இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றஞ் சுமத்துகின்றீர்கள். இராணுவம் பெரிய அழிவைச் சந்தித்தால் அதைத் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் எனக் குறிப்பிடுகிறீர்கள்.

உண்மையிலேயே விடுதலைப் புலிகள் ஓர் அமைதி ஒப்பந்தத்தை - ஒருயுத்த நிறுத்த ஒப்பந்தத்தை - கைச்சாத்திட்டு அதற்கு உயர்ந்த மதிப்பைக் கொடுத்து தங்களைக் கட்டுப்படுத்தி வைத்துள்ள சூழலில் நீங்கள் மக்களுடைய ஜனநாயக வழிப்போராட்டங்களை அடக்கி, இராணுவ வன்முறை கொண்டு மக்கள் மீது வன்முறையை ஏவிவிட்ட நிலையில் மக்கள் கொந்தளித்து, மக்களே திருப்பித் தாக்குகின்ற ஒரு சூழலை நீங்களே தமிழீழ தேசத்தில் உருவாக்கியிருக்கின்றீர்கள். அதனுடைய விளைவை நீங்கள் அனுபவிக்கின்றீர்கள்.

எமது மக்கள் உங்களிடம் சவால் விடவில்லை. தாங்கள் காலங்காலமாக வாழ்ந்த பூர்வீக மண்ணில் நாங்களும் மனிதர்களாக - கௌரவமாக - மகிழ்ச்சியாக - எந்தவித நெருக்குவாரங்கள், ஆக்கிரமிப்புகள் அற்ற நிலையில் நிம்மதியாக வாழவேண்டும் என்கின்ற அந்த உயர்ந்த - உன்னதமான - மனித நேயம்மிக்க கோரிக்கையைத்தான் எமது மக்கள் உங்களிடம் விடுக்கின்றார்கள். தமிழீழமெங்கும் மக்கள் கொந்தளிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை அமைதிப்படுத்தவோ, கொந்தளிப்பான சூழ்நிலையை சுமுகமாக்கவோ முடியாது. சிங்களப் படைகள் மேலும் மேலும் எமது மக்களின் உணர்வுகளை - கொந்தளிப்புகளைத் தீவிரப்படுத்தும் நோக்கோடு மக்களைக் கொன்றொழிப்பதும் சுடுத்துவதும் நெருப்பில் ரயர் போட்டு எரிப்பதும் தமிழீழம் எங்கும் பரவிக்கொண்டு இருக்கின்றன. ஆகவே, நாங்கள் சர்வதேச சமூகத்திடம் கேட்கிறோம், இலங்கை அரசினுடைய இந்த அடாவடித்தனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உங்களுடைய முழு அழுத்தத்தையும் பிரயோகியுங்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மட்டும் குற்றம் சுமத்துகின்ற இந்தப் போக்கைக் கண்டிக்கவேண்டும்.

தமிழ் மக்களை அமைதிப்படுத்தவேண்டும் என்றால் இந்த ஆக்கிரமிப்பு இராணுவம் எங்கள் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இந்த வன்முறையை நிறுத்துவதே ஒரே வழி.



இன்று எமது ஜோசப் ஐயாவினுடைய இழப்பு என்பது ஈடுசெய்யமுடியாத இழப்பு. தமிழீழ தேசத்திலே மிகமிக உயர்வான கௌரவத்தை எமது தேசியத் தலைவர் வழங்கியுள்ளார். 'மாமனிதர்' என்கின்ற கௌரவத்தை அளித்துத் தமிழீழ தேசம் என்றும் போற்றும் தலைவனாக அவர் இந்த மண்ணிலே நிலைப்பார்.

அவருடைய உணர்வுகள், எந்தக் காலத்திலுமே, எந்த சதிகளுக்கும் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் போக்குகளுக்கும் எந்தவிதத்திலும் இடங்கொடுக்காமல் காலங்காலமாக உறுதியாகச் செயற்பட்டவர்.

இந்த நான்கு வருட அமைதிக் காலத்திற்குள் தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்குச் ஸ்ரீலங்கா தேசத்தின் சிங்கள இனவாதிகள் முயன்று எங்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தபோது வீறுகொண்டு எழுந்து எங்களது ஜோசப் ஐயா செயற்பட்டார். இது ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் தெரியும்.

இன்று அவர் இந்த மண்ணிலே வீழ்த்தப்பட்டபோது, உலகெல்லாம் வாழும் அனைத்து தமிழர்களும் பொங்கி எழுந்துள்ளார்கள்; கொதித்தெழுந்துள்ளார்கள். உலகெங்கும் தமிழர்களை இந்த இழப்பு சோகத்துக்குள்ளாக்கியுள்ளது. ஏனெனில், ஒருபோதும் அசையாத உறுதியான, இறுக்கமான ஒரு தலைவராக, தமிழினத்தின் கௌரவத்தை உரிமையைப் பேசுகின்ற அதற்காகச் சுழன்றடித்த ஒரு புயலாகச் செயற்பட்ட மாமனிதர் எங்களுடைய ஜோசப் ஐயா.

இன்று அவரை மிகவும் கோழைத்தனமாக அதுவும் ஆலயத்துக்குள்ளே - முழு உலகமுமே அமைதிக்காக வேண்டுகின்ற அந்தப் புனித நன்னாளிலே - வழிபட்டுக் கொண்டிருந்த ஆலயத்துக்குள் வைத்து - அங்கிருந்த ஆயருக்கு முன்னாலேயே - சுட்டுக்கொன்றிருக்கிறார்கள்.

இது எங்கள் மக்களின் மனதை ஆழப் புண்படுத்தியிருக்கிறது; ஆழக் காயப்படுத்தியிருக்கிறது.

இதை சிங்களதேசம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இப்படியான போக்குகளால் நிச்சயமாக நீங்கள் தமிழினத்தின் உரிமைகளையோ, அவர்களது அபிலாசைகளையோ, அவர்களினுடைய எழுச்சிகளையோ அடக்கமுடியாது - அழிக்கமுடியாது.

மேலும் மேலும் இதை நீங்கள் ஊதிப் பெருப்பிக்கின்றீர்கள். மக்கள் கொந்தளிப்பை மேலும் தீவிரமாக்கி தமிழ் மக்களினுடைய உறுதியை நீங்கள் பரிசோதிக்கின்றீர்கள்.

ஆகவே, இதற்கான விளைவை நிச்சயமாகச் சிங்களதேசம் அடையும். சிங்களதேசம் ஒருபோதும் தமிழ் மக்களுடைய உரிமைகளையே, எழுச்சிகளையோ அடக்கமுடியாது. இவரின் இழப்பினூடாக மக்கள் மனங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆழமான உணர்வு ஒருபோதும் தணியவிடாது.

அந்தவகையில் இன்று ஜோசப் ஐயாவின் இறுதிநிகழ்விலே கூடியிருக்கின்ற எங்களுடைய மக்கள் பிரதிநிதிகள், எமது மக்கள் குறிப்பாக, மலையகத்தில் இருந்து வருகைதந்து சிறப்பித்து தமது அனுதாபங்களைத் தெரிவித்த மக்கள் தலைவர்களுக்கும் எமது தேசியத் தலைவர் சார்பாகவும் எமது தேசத்தின் சார்பாகவும் நன்றி தெரிவிக்கின்றேன் - இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(ஐ-12)

# மாமனிதர் ஜோசப்பின் கொடூர மரணம் ஆயுதப் போரை நியாயப்படுத்துகின்றது

## அஞ்சலி உரையில் மனோ கணேசன்



கிளிநொச்சி,டிசெ.29

ஆயுதப் போராட்டத்தின் மூலம் தான் தமிழ் மக்கள் தமது நியாயங்களை முன்னெடுக்கமுடியும் என்ற செய்தியை அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவு உணர்த்துகின்றது.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் அஞ்சலி வைபவத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்திருந்த அவர் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் கூறியதாவது:-



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் அஞ்சலி நிகழ்வில் வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அஞ்சலி செலுத்தியபோது எடுக்கப்பட்ட படம். (மேலும் படங்கள் 10 ஆம் பக்கத்தில்)

நாடாளுமன்றத்தில் ஓர் எளிமையான மனிதராக, இனிமையான மனிதராகத் தமிழ் மக்களின் போராட்டத்துக்கான நியாயத்தைச் சரியானமுறையில் உரியமுறையிலே எடுத்தியம்பக்கூடிய மனிதராக விளங்கியவர் ஜோசப். அவர் ஒரு போராட்ட வீரராக இலங்கையின் தலைநகர் கொழும்பிலே, வீதியிலே நாங்கள் நடத்தியிருக்கும் போராட்டங்களிலே எங்களுடன் தோளுக்குத் தோளாக நின்று கலந்துகொண்டவர். ஒரு வீரனாகவே அவரை என்றும் நாம் நினைவில் வைத்துள்ளோம். அந்த நினைவுகள் இச்சந்தர்ப்பத்தில் எமது மனதில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கு இரண்டு பரிமாணங்கள் இருப்பதாக நாம் நினைக்கின்றோம். அதில் ஒன்று இராணுவ ஆயுதப் போராட்டம். அடுத்தது சாத்வீக நாடாளுமன்றப் போராட்டம்

இரண்டாவது போராட்டத்திலே ஜோசப் அவர்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார் - வழங்கி வந்துள்ளார் என்பதை அனைத்து தமிழ் மக்களும் அறிவர்.

இன்று அவர் கோழைத்தனமாக- கேவலமான முறையில் - கொல்லப்பட்டிருந்தாலும் கூட மண்ணில் வீழ்ந்ததன் மறுபக்கமாக தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்குத்தான் வழிசெய்துள்ளார்.

கோழைத்தனமாக அவர் கொல்லப்பட்டதன் மூலம் சிங்கள - பௌத்த வாதிகளால் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தி விடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் சாத்வீக ரீதியில் - நாடாளுமன்ற ரீதியில் - சமாதான ரீதியில் - தமது நியாயங்களை நிம்மதியாகக் கொண்டு வெல்லமுடியாது. மாறாக இராணுவ ஆயுதப் போர் மூலமாகத்தான் தமிழ் மக்கள் தமது நியாயங்களை முன்னெடுக்கமுடியும் என்பதை உணர்த்தியிருக்கின்றனர்.

வடக்கையும் கிழக்கையும் பிரித்திட வேண்டும், தகர்த்திடவேண்டும், தமிழர் தாயகத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற பேரினவாத அவா தொடர்ந்து வந்த ஒவ்வொரு சிங்கள அரசிடமிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அவாவுக்கெதிரான, அந்தப் பேரினவாதத்திற்கு எதிரான ஓர் அடையாளமாக ஜோசப் அவர்கள் திகழ்ந்து கொண்டிருந்தார்.

தமிழர் தாயகத்தின் ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகிய இரண்டுக்கும் அடையாளமாக - பேரினவாதத்துக்கு - சவாலாக அவர் இருந்துள்ளார்

இதன்மூலமே இன்று தமிழ் மக்கள் மத்தியில் அவர் மாமனிதராகத் திகழ்கின்றார் - என்றார் மனோ கணேசன் (ஐ-12)








படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கத்தின் இறுதி அஞ்சலிக் கூட்டம் நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள், மலையகத் தலைவர்கள் அஞ்சலி செலுத்துவதைப் படங்களில் காணலாம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 741 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 27-12-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4959992-4974267 | |

லக்கினம் மிதுனம்

வெற்றி இலக்கங்கள்

04 36 39 54

ஜக்பொட் பரிசு ரூபா. 55,60,350/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,15,745 | 10/- | 31,57,450/- |
| 2.இலக்கங்கள் | 29,032 | 20/- | 5,80,640/- |
| 1.இல லக்கினம் | 28,592 | 30/- | 8,57,760/- |
| 2.இல லக்கினம் | 2,634 | 100/- | 2,63,400/- |
| 3.இலக்கங்கள் | 777 | 500/- | 3,88,500/- |
| 3.இல லக்கினம் | 69 | 5,000/- | 3,45,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 55,60,350/- | 55,60,350/- |
| | | மொத்தம் | 1,14,53,100/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,25,05,350/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,25,05,350/- தொடர் இல. 5899067 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 4973715-9-00 |
| மாத்தளை | 4961847-5-63 |
| கண்டி | 4970252-5-05 |
| புத்தளம் | 4960387-1-70 |
| குருநாகல் | 4965714-7-91 |



## வீடு வாடகைக்கு

கொக்குவில் ஞான பண்டித வீதியில் அமைந்துள்ள தனி வீடு வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு:
0775 554 440 கு.மோகன்,
021 222 5021


## இரு நாள்களுக்கு இலவச கணனிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.29

'ஐ.டி.எம்.' கணனி நிறுவனம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இலவச கணனிக் கருத்தரங்குகளை இன்றும் நாளையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்திலும் வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்குகளில் கொழும்பு ஐ.டி. எம் நிறுவன தலைமை அலுவலகப் பிரதிநிதி மற்றும் யாழ்.நிறுவன கணனி விரிவுரையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் இணைந்து பயன்பெறுமாறு மாணவர்களை ஐ.டி.எம். நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

(த-12)

## கொழும்புத்துறையிலும் கெடுபிடி

அரியாலை,டிசெ.29

கொழும்புத்துறை பகுதியிலும் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

கணக்கர் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஓட்டோவுடன் நின்ற சாரதிகள் மற்றும் வீதியால் சென்ற இளைஞர்களையும் மறித்த படையினர் அப்பகுதியில் வீதி ஓரமாகவுள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யுமாறு பணித்தனர்.

படையினரின் இந்த வற்புறுத்தலை அடுத்து ஓட்டோசாரதிகளும் இளைஞர்களும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்தனர்.

அத்துடன், வீதியால் செல்லும் மக்கள் படையினரால் திடீரென வழிமறிக்கப்பட்டு உடற்சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் அடையாள அட்டைகளும் பரிசோதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 01 - 1923



உதிர்வு 08 - 01 - 1997

### அமரர் பொன்னையா நவரத்தினசிங்கம்

சமாதான நீதிவான்
(உரிமையாளர், யாழ்தேவி ரான்ஸ்போட் சேவிஸ்)

திதி: 29.12.2005

*எங்கள் குடும்பத் தலைவனாய், அன்பின் திருவுருவாய்*
*வாழ்ந்து எங்களுக்கு வாழ்வளித்த வழிகாட்டியே!*
*எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து*
*எங்கள் நினைவுடனேயே இயற்கை*
*எய்திய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்*
*ஒன்பது கடந்தாலும் உங்கள் திருவுருவம்,*
*பாச நினைவுகள் என்றென்றும் எங்கள் மனதில்*
*நீங்காது நிலைத்து நிற்கும். நீங்கள் காட்டிய*
*பாதையிலேயே நாங்களும் வாழ்ந்து என்றும்*
*உங்கள் இலட்சியத்தைப் பின்பற்றி நிற்போம்!*

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், உறவினர்.

(44594) (32-18-34-15)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 26 - 11 - 1936



உதிர்வு 29 - 11 - 2005

### அமரர் வைரமுத்து முருகேசு

(இளைப்பாறிய MLT)

*29.11.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.12.2005) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்
M.ஜெயதாசன்,
M.குமரதாசன்.

பாரதி வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

-(44595) (32-18-34-15)





அதிசயம்! SALE SALE SALE

ஆனால் உண்மை

ரூபா 3,000 க்கு மேல் கொள்வனவு செய்யும்
ஆண்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மணிப்பேஸ்
பெண்களுக்கு ஒரு கைக்கடிகாரம்
இனாம் வழங்கப்படும்.

SALE

மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்

இல.10, மின்சார நிலையவீதி, பெரிய கடை,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 4590174



# கருத்தரங்கு ஒத்திவைப்பு

குருநகர்,டிசெ.29

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருந்த உள்ளக நோயாளர்களின் பதிவுபற்றிய கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-51)

## முக்கிய அறிவித்தல்

தற்போது வெளியாகிய பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியினால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்கள் அனைவரும் இன்று (29.12.2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி (New Science Hall) இல் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ்விடயம் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு: பெற்றோர்களும் அவசியம் கலந்துகொள்ளவும்.

(44701) (54-12-17) - பாதிக்கப்பட்ட மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பொன்னம்மா

ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த திருமதி கந்தசாமி பொன்னம்மா அவர்கள் நேற்று (28.12.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தலைவர் கந்தசாமியின் அன்பு மனைவியும் சுவர்கலோகநாதன், வேலாம்பிகையம்பாள், ஜெகதீஸ்வரி, பராசக்தி, இராசலட்சுமிதேவி, பரமானந்ததேவி, நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2005) வியாழக்கிழமை நண்பகல் 1மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால், புத்தூர்.* (சி-47102) (54-12-17)
சு.வேலுப்பிள்ளை, மருமக்கள்.

## முதலாம் வருட நினைவில்



பிறப்பு 24 - 05 - 1936

இறப்பு 09 - 01 - 2005

### அமரர் கதிர்காமு சின்னத்துரை

**ஆண்டுகள் ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம் என்றும் உங்கள் நினைவுள்ள...**

புத்தூர் கிழக்கு, புத்தூர். (44707) (54-12-17)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## பரீட்சைகளை ஒத்திவைத்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சகல பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
28.12.2005
(சி-47100) (54-12-17)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## சபிண்டீகரண அழைப்பு



29-11-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

திருமதி
### காளிதாசன் பரமேஸ்வரி

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (29-12-2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி.* (44705) (54-12-17)
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள். சகோதரர்கள்.

## ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவையால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் வெளியீட்டு விழா நாளை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை சமாதான நீதிவான் எஸ். தேவதாசனும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்துவர். தொடர்ந்து மகேஸ்வர பூசையின் பின் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (6-ரி)

**படிவம்**

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (NDT) கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி 31.01-2006

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

**திருமதி இராஜசுலோசனா சிவகுருநாதன்**
**செல்வி இராஜசுலோசனா நடராசா**
(தேசிய அடையாள அட்டை)

இவ்விரு அடையாள அட்டைகளும் கடந்த வாரம் யாழ்.பருத்தித்துறைப் பேருந்தில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள்கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

சி.சிவகுருநாதன்,
தென்னகம், கரவெட்டிமேற்கு,
கரவெட்டி.
(44706)

**வீட்டுப்பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள பிறிட்ஜ், ரீவி, வீட்டுத்தளபாடங்கள், ஜப்பான் ஹொண்டா C-50 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.

(44706) தொடர்புக்கு-077 6176846.

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**

பிரசன்னா, லைலா
உங்கள் பிரகாஷ்ராஜ் வழங்கும்
**கண்ட நாள் முதல்**
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15

**மனோகரா யாழ்ப்பாணம்**



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

**நாகம்ஸ் சுன்னாகம்**

பிரசன்னா, மீராஜஸ்மின் நடித்த
**கஸ்தூரிமான்**
தினசரி: புது நேரம்
10.30, 2.30, 5.30

**ராஜா யாழ்ப்பாணம்**

விஜய், ஜோதிகா, விவேக் நடித்த
**திருமலை**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30
(45404)

**DAIDO**




சகல விதமான (CHINA) சீனா மோட்டார் சைக்கிள்களுக்குமான உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுக்கொள்ளலாம். மொத்த விற்பனையாளர்களுக்கு விசேட கழிவு

செரெண்டிப் மோட்டர் எண்டர்பிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
608, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு- 10
தொலைபேசி: 01-2341580-1, 2438779
பெக்ஸ்: 01- 2454608, 2438425
E-mail: zme@slt.lk

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரிமலர் இராசேந்திரம்



ஆனைக்கோட்டைபிடாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிமலர் இராசேந்திரம் நேற்று (28.12.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கொட்டடி நமசிவாய வித்தியாசாலை ஓய்வுபெற்ற உபஅதிபர் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை- மதலேனம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பீற்றர், செபமாலைமலர், கீதபொன்கலன் (அதிபர், சென்சேவியர் மகா வித்தியாலயம் திருகோணமலை), றோஸ்மலர் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜனகன் (கனடா), அகிலன் (பிரதேசசபை மானிப்பாய்), றமணன், சுபோ (கனடா), ஆகியோரின் பெரிய தாயும் பேபி, றூபி, காலஞ்சென்ற அன்பு ஆகியோரின் சிறிய தாயும் காலஞ்சென்றவர்களான பாபு, பவானி மற்றும் கௌரி (ஜேர்மனி), நிஸ்கலன், நிலோஜன், டிலனி, யூடி, ஜெசிந்தா ஆகியோரின் அன்பு மாமியும் டேவிட் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் செபஸ்தியாம்பிள்ளை மற்றும் அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் சிந்துஜா, நிரோஜா, அனோஜா, பாலா, கண்ணன், யோன்சன், ராஜு, றூப்ன் ஆகியோரின் பேர்த்தியும் ஜெகநாதன் (உதயன் பணிமனை) அந்தோனிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.12.2005) வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு அவரின் 'பூபாளம்' இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
*பிடாரி அம்மன் கோயிலடி, ஆனைக்கோட்டை.* (44704) (54-12-17)
சந்தியா இராசேந்திரம் (கணவர்)

### திருமதி சிவநேரு சந்திரகுமாரி



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநேரு சந்திரகுமாரி நேற்று (28.12.2005) புதன்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் தம்புவத்தை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிவநேருவின் (ஜேர்மனி) அன்பு மனைவியும் சுஜேநேருவின் (ஜேர்மனி) அன்புத் தாயும் சிவசுப்பிரமணியம் (பொறியியலாளர்), பாலசுப்பிரமணியம், இந்திரகுமாரி, இராஜேஸ்வரன் (பொறியியலாளர் - கனடா), வசந்தகுமாரி, இராஜகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவவசந்தமலர், சிவரஞ்சிதமலர், சிவயோகமலர், சிவசக்திமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.* (சி-47102) (54-12-17)
சிவசுப்பிரமணியம் (சகோதரன்), குடும்பத்தினர்.

### கந்தையா பத்மநாதன் (முத்துலிங்கம்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு வங்கியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அன்னத்தின் சகோதரனும் சிவமணிதேவியின் அன்புக் கணவரும் பத்மலிங்கம் (கனடா), பத்மலோயினி (கனடா), நாகலோயினி (ஜேர்மனி), பத்மரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியபாமா, சிவகுமார், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் கிரீசன், லவன், ஹரிகரன், ரிஷிகரன், ரிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் கமலாதேவியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (27.12.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 5 மணிக்கு காரைக்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வங்கியடி, இணுவில் கிழக்கு.* (44710) (54-12-17)
ப.பத்மலிங்கம். (மகன்).

**LONDON ENGLISH COLLEGE**

NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889

BCNS Business computing Network solution. No- 229 A Mitcham Moad, London.

**புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

காலம் -3 மாதம் ஆரம்பம் - 31.12.2005

O/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கும் ஏனையவர்களுக்குமான ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

**Certificate in English** - Weekdays & Weekend
**Diploma in English** - Weekdays & Weekend
} பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

**Spoken English**

சிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். வகுப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டவை.
கட்புல செவிப்புல சாதன பயன்பாடு. பேச்சுப்பயிற்சிக்கு முக்கியம் அளித்தல்.
குறிப்பு: ஏற்கனவே இங்கு கற்றவர்கள் தங்களுக்குரிய சான்றிதழைப்பெற்றுக் கொள்ளலாம்.

### யுத்தத்தை நோக்கிய நகர்வு என்கிறது ஐ.தே.கட்சி

# மஹிந்த பதவியேற்று 38 நாட்களில் 81 பேர் படுகொலையுண்டுள்ளனர்

## அவர்களில் 41 பேர் படையினர், பொலீஸார்

கொழும்பு,டிசெ.29

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து மீண்டும் ஒருமுறை யுத்தம் வெடிக்கும் சூழல் ஏற்பட்டு வருகிறது.

அவர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு 38 நாள்களில் 81 பேர் கொலை செய்யப்பட்டு விட்டனர். இவர்களுள் 41 பேர் படையினரும், பொலீஸாரும் ஆவர்.

புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பாகத் தாம் பதவியேற்று மூன்று மாதங்களுக்குள் தெற்கில் உள்ள அனைவருடனும் பேசி ஒரு தீர்மானத்தையெடுப்பார் என்றும் அதன் அடிப்படையில் தாம் புலிகளுடன் பேசுவார் என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறிவந்தார்.

அவர் பதவியேற்று 38 நாட்களாகியும் அவர் கூறியவை தொடர்பாக முதற்கட்ட நடவடிக்கைகூட இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான சூழ்நிலையே தென்படுகிறது. - இவ்வாறு நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது ஐ.தே.கவின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து நாட்டில் அமைதியின்மை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் கொலைச்சம்பவங்கள் இதனையே காட்டுகின்றன.

கொலை செய்யப்படுபவர்கள் யாராக இருந்தாலும் அக்கொலைச் சம்பவங்களை ஐ.தே.க. வன்மையாகக் கண்டிப்பதோடு, அக்கொலைகளை நிறுத்த உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறது.

இவ்வளவு கொலைச் சம்பவங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் வாய் திறவாது அமைதியாக உள்ளனர்.

இவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற்படுகின்றனர். இந்தப் பிரச்சினையில் இருந்து மெதுவாக நழுவி விடப்பார்க்கிறார்கள்.

மஹிந்தவை ஜனாதிபதியாக்கிய இவர்களுக்கு இச்சம்பவங்கள் தொடர்பாகப் பதில் கூறவேண்டிய பொறுப்புகள் உண்டு. பிரச்சினைகள் வருகின்றபோது இவ்வாறு நழுவல் போக்கைப் பின்பற்றுவது சரியல்ல.

இதில் வேடிக்கையான ஒரு விடயம் என்னவென்றால் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியான கொட்டகதெனிய இக்கொலைச் சம்பவங்களுக்கு ஐ.தே.கவே காரணம் எனக் கூறியுள்ளார். இது ஓர் இயலாமைப் போக்கு என்பதை நாம் மக்களுக்குச் சொல்லாமலே மக்கள் விளங்கிக்கொள்வர்.

இவ்வாறான சாக்குப் போக்கையெல்லாம் விட்டுவிட்டு உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்கும் வழியைப் பாருங்கள். - இவ்வாறு அவர் கூறினார். (க)

# இத்தாலி நாட்டின் முன்னாள் பிரதமர் திருமலை விஜயம்

யாழப்பாணம், டிசெ.29

இத்தாலிய நாட்டின் முன்னாள் பிரதமர் யூலியாடோ பிராரோ நேற்று திருகோணமாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இத்தாலிய அரசின் உதவியு டன் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகளை அவர் பார்வையிட்டார்.

கடலோரக் கிராமமான பத்தாம் குறிச்சியில் இத்தாலிய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட அண்ணா மீனவர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், மீனவர் இளைப்பாற்று மண்டபம் ஆகியவற்றை அவர் திறந்து வைத்தார்.(ஒ-1 )

# கண்டனக் கூட்டம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பரவலாக இடம்பெறும் மனிதப்படுகொலைகளை கண்டித்துக் கண்டனக்கூட்டமொன்று நாளை வெள்ளிக்கிழமை புத்தளத்தில் இடம்பெறவுள்ளது. புத்தளம் முஸ்லிம் சமய கலாச்சார மண்டபத்தில் நாளை மாலை 4.00 மணிக்கு இடம் பெறவுள்ள இக்கூட்டத்தை புத்தளம் முகைய தீன் ஜும்ஆப் பள்ளி நிர்வாக சபையும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புத்தளம் மாவட்டக் கிளையும் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன. மும்மதத் தலைவர்களுடன் சகல இன மக்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

## இராணுவத் தளபதி யாழ். விஜயம்

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்வதற்காக யாழ்.வந்து திரும்பினார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# திருமலையில் இராணுவச் சாரதி வீட்டில் வைத்துச் சுட்டுக்கொலை

### அவரின், மனைவி, மைத்துனன் படுகாயம்

திருகோணமலை, டிசெ. 29

திருகோணமலை சீனக்குடா அருகே கணேசபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இராணுவச் சாரதி ஒருவர் கொல்லப்பட்டார். அவரது மனைவியும் அவரது மைத்துனனும் படுகாயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுனில் (வயது- 50) என்ற இராணுவச் சாரதியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். ஞானாவதி (வயது- 48) என்ற அவரது மனைவியும், நிமால் (வயது-54) என்ற அவரது மைத்துனனுமே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் இனந்தெரியாத- ஆயுதம் தாங்கிய - குழுவொன்று இவரது வீட்டுக் கதவைத் தட்டியுள்ளது.

அப்போது சுனிலின் மனைவியான ஞானவதி கதவைத் திறந்துள்ளார். திடீரென உள்ளே நுழைந்தவர்கள் முதல் ஞானாவதியைச் சுட்டுவிட்டுப் பின்னர் சுனிலையும் அவரது மைத்துனன் நிமாலையும் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர்.

சுனில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வீட்டினுள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு கைக்குண்டு ஒன்றை வீசி வெடிக்கச் செய்தனர் எனவும்; அதன் பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து மூவினங்களும் வாழ்கின்ற கணேசபுரம் மற்றும் அதனை அண்டிய கிராமங்களான சங்கமம், சீனன்குடா மற்றும் நான்காம் கட்டை போன்ற பகுதிகளில் பதற்றம் நிலவியது. இப்போது பதற்றம் சற்றுத் தணிந்துவிட்டதாக அறியவருகிறது. (க)

# யாழ். மாவட்ட சிவில்....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

தயாரிக்கப்பட்டு வருவதாக அறிய வந்துள்ளது.

இதேவேளை-

அரச ஊழியர்கள், வங்கிகளின் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நான்காவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது.

பிரதேச செயலகங்கள் உட்பட அரச திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள் அனைத்தும் இழுத்து மூடிக்கிடக்கின்றன. ஒரு சில உயரதிகாரிகள் மட்டும் மூடிய அலுவலகங்களுக்குள் இருந்துகொண்டு 'பணியாற்றுகின்றனர்.

வங்கிகள் மூடிக்கிடப்பதால் பணப்புழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. காசோலைகள் பரிமாற்றம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தடைப்பட்டதால் வர்த்தகர்கள் திண்டாடிப்போய் இருக்கின்றனர். வருட இறுதியில் கொடுக்கல், வாங்கல்கல் கணக்குகளை முடிப்பதில் தாமதம் ஏற்படிருக்கின்றது. மக்கள் நடமாட்டம் வெகுவாக அருகிப்போய்விட்டதனால் வியாபாரம் முற்றாகப் "படுத்துவிட்டது" என்று வர்த்தகர்கள் கவலைகொண்டிருக்கின்றனர்.

பரீட்சைகள் பலவும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலைகள் ஆரம்பமாகாத போதிலும் மாணவர்களின் கல்வி நிலையிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை அருகிவிட்டது. வீதிகளில் பாதுகாப்பற்ற - உயிராபத்தான - சூழ்நிலை காணப்படுவதால் பிள்ளைகளை கல்வி நிறுவனங்களுக்கு பெற்றோர்கள் அனுப்புவதில்லை.

நாளாந்தம் தொழில் செய்து சீவியம் நடத்தும் குடும்பங்கள் தொழில் இழந்து பாதிப்படைந்துள்ளன. அவர்களில் பலர் பட்டனி கிடக்கும் நிலையும் உருவெடுத்துள்ளது. (ஐ-3)

# இந்தியாவின் அதிக...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

அணிவகுப்பு மரியாதை நேற்றுக்காலை 9.45 மணிக்கு புதுடில்லியில் ராஷ்டிரபதி பவனில் இடம்பெற்றது. இந்த அணி வகுப்பு மரியாதையின் பின்னர் ஜனாதிபதி தலைமையிலான குழுவொன்று ராஜ்கோட்டிலுள்ள மகாத்மா காந்தியின் சமாதிக்குச் சென்று மலரஞ்சலி செலுத்தியது.

இதன் பின்னர் நண்பகல் 12 மணிக்கு இந்தியப் பிரதமரை சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பின்னர் இந்தியப் பிரதமரால் வழங்கப்பட்ட மதிய உணவு விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டார்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது இலங்கையின் அமைதி முயற்சிகளுக்காகத் தாம் எடுத்திருக்கும் முயற்சிகள் குறித்து நீண்ட விளக்கமளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் தற்போது நிலவும் அமைதியற்ற சூழ்நிலை பற்றியும் விரிவாக விளக்கிக் கூறினார்.

இலங்கையின் அமைதி முயற்சிகளுக்காக அதில் புதுடில்லி முக்கிய பங்கை வகித்து வருவதாகக் கூறி, அதற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இனிவரும் காலத்தில் புதுடில்லியின் இந்த பங்களிப்புக் காத்திரமாகவும், மிகுந்த பொறுப்புகளைக் கொண்டதாகவும் இருக்கவேண்டுமென்பதைக் கொழும்பு விரும்புவதாகவும் சுட்டிக் காட்டினார்.

இதனடிப்படையில் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான இணைத்தலைமை நாடுகள் கூட்டமைப்பின் அங்கத்துவ நாடாக ஆவதற்கு இந்தியா முன்வரவேண்டுமென்றும் இலங்கை ஜனாதிபதி இந்த சந்திப்பின் போது கோரிக்கை விடுத்திருக்கிறார் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்கள் பற்றியும் இந்தச் சந்திப்பின்போது இந்தியப் பிரதமரிடம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் நடத்திய பேச்சுகளின் முழுமையான விவரங்கள் வெளிவரவில்லை. ஆனாலும், பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைதி முயற்சிகள், பொருளாதாரம், சினேகபூர்வ நட்புறவு போன்ற விடயங்கள் இச்சந்திப்பில் பேசப்பட்டதாகக் கூறினார்.

நேற்றிரவு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அளித்த இராப்போசன விருந்துபசாரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். ஜனாதிபதியின் விஜயத்தின் முடிவில் கூட்டறிக்கையொன்றும் வெளியிடப்படவுள்ளது. (ஒ-க)

I. D. M.
Nation's ICT Academy
Affilitated University College
இவ்வருடம் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணனி வழிகாட்டல் கருத்தரங்கு சம்பந்தமான விபரத்தினை 5 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.
(சி-47074)
(54-46-12)
- இயக்குனர்.

# இலங்கைக்....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

யால் சுட்டும் தமிழக மீனவர்களை விரட்டியடித்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட படகுகளிலிருந்து ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இறால்களை இலங்கைக் கடற்படையினர் பறித்துச் சென்றனர் என இராமேஸ்வரம் பகுதியின் மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கைக்கடற்படையினரின் இவ்வாறான அட்டகாசத்தைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழக மீனவர் சங்கங்கள் இந்திய மத்திய அரசைக் கோரவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (ஒ-க)

# மஹிந்த - ஜெயலலிதா....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு திடீரென ரத்துச் செய்யப்பட்டது ஏன் என்று செய்தியாளர்கள் கேட்டபோது, ' இலங்கை அதிபரின் தமிழக சுற்றுப்பயணம் உத்தேசமாகவே திட்ட மிடப்பட்டிருந்தது. இரு தலைவர்களுக்கும் நேரம் இருந்தால் சந்திப்பை உறுதிசெய்வதாக இருந்தது. ஆனால், தமிழக முதல்வர் அன்றைய தினம் சென்னையில் இல்லாததாலும், ஜனாதிபதிக்கு ஏற்கனவே பல நிகழ்ச்சிகள் இருப்பதாலும் அவரது பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

நாளை வெள்ளிக்கிழமை காலை சென்னை சென்று, அதன் பின்னர் குருவாயூர் செல்லத் திட்டமிட்டிருந்தார் ஜனாதிபதி. புதிய பயணத் திட்டத்தின்படி டில்லியில் இருந்து நேரடியாக கொச்சி சென்று குருவாயூர் கோயிலுக்குச் செல்வார். அங்கிருந்து கொழும்பு திரும்புவார் என்று தெரிகிறது. இன்று வியாழக்கிழமை காலை புத்தகயை செல்லத் திட்டமிட்டிருந்த அவர் அந்தப் பயணத்தையும் ரத்துச் செய்துவிட்டார். (ஒ)

# ஜோசப்பின்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

யில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி ஜோசுப் பரராஜசிங்கத்தின் உடல்நிலை சற்றுத் தேறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இன்றைய தினம் இறுதிக்கிரியை நிகழ்வில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

இறுதிக்கிரியை நடைபெறும் பகுதியிலும், நகரத்தின் முக்கியமான பல இடங்களிலும் நேற்று முதல் இராணுவத்தினரும், பொலீஸாரும் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக வரும் முக்கிய பிரமுகர்களைப் பாதுகாப்பதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.(ஒ-க)

# முத்திரைச் சந்தியில்....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

முத்திரைச் சந்தைப் பகுதியில் நின்றிருந்த படையினர் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சைகை காட்டினர் என்றும் - மோட்டார் சைக்கிள் சில மீற்றர்கள் தூரத்தில் நிறுத்தப்பட்டபோது அங்கு சென்ற படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர்கள் கொல்லப்பட்டனர் என்றும் - அப்பகுதி மக்கள் கூறினர்.-

இதேவேளை, படையினர் மீது கிரனேட் வீச முயன்றவர்களே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், அவர்களிடமிருந்து கிரனேட் ஒன்று மீட்கப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸார் சடலங்களை அடையாளம் காணவும், பிரேத பரிசோதனைக்காகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் மாலை 5.30 மணியளவில் ஒப்படைத்தனர்.

யாழ். மாவட்ட பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் வைத்தியசாலைக்கும் பின்னர் சம்பவ இடத்திற்கும் சென்று மரண விசாரணை நடத்தினார்.

நேற்றிரவு சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

# நேற்று மன்னார்.....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

ளப்பட்டிருந்த காரணத்தால் நகர்ப்பகுதியில் மக்களின் நடமாட்டம் மிகவும் குறைந்தே காணப்பட்டது. போக்குவரத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்ததால் அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள் போன்ற எதுவுமே இயங்கவில்லை.

நகரத்தின் பெரும்பாலான பகுதிகளில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாகக் காவல்கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். விசேட ரோந்துச் சேவைகளும், பொலீஸ் சோதனைகளும் நடத்தப்பட்டன.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.